514

574
1.53

MADRAS

O-,2 N.NY2,E
N53
103846

...சனம் – பாடல்கள் 0–6–0

என் வீடு

காட்சி 1

சிவராம் வீட்டில்

சிவராமும், அவரது குழந்தைகளான கோபி, ஹரி, லக்ஷ்மி ஆகிய மூவரும் பாட்டுப் பாடிக்கொண்டே தேகப் பயிற்சி செய்கின்றனர்.

பாட்டு முடியும் போது கோபி பாட்டுக்குத் தகுந்தபடி தேகப்பயிற்சி செய்யவில்லை. அதை சிவராம் பார்த்து விடுகிறார்.

சிவராம்: டேய் கோபி! என்னடா இது, பாட்டு ஒரு பக்கம் போகுது, கை ஒரு பக்கம் போகுது. உங்கண்ணனே பாருடா ஹரி! இந்த சின்னப் பாட்டுக்கே தாளம் தப்பிப் போகுது. இவன் பெரிய சங்கீத வித்வான் ஆகப்போகிறானாம். உம்! உங்கம்மா கூப்பிட்டாச்சி, இனிமே உங்க புத்தி இதிலே இருக்காது. வாங்க போகலாம்.

கிருஷ்ணன் படம் முன்பு பூஜை நடக்கிறது. எல்லோருமாக பாடுகிறார்கள்.

காட்சி 2

வீட்டில் கோபு பேனாவை உதறுகிறான். அதிலிருந்து தெறித்தமை, ஹரியின் சட்டையில் படுகிறது.

ஹரி: யேய், உனக்கு கண்ணு தெரியலே! Fool!

கோபி: Fool கில்னு பேசினே உதைப்பேன், ராஸ்கல்.

ஹரி: உதைடா பார்க்கலாம்

கோபி: ஓ! அவ்வளவுக்கு வந்திட்டிங்க.

[கோபி ஹரியை அடிக்கிறான். இருவரும் சண்டையிடுகின்றனர். அதைக்கண்ட லக்ஷ்மி அம்மா அம்மா என்று கத்துகிறாள். அதைக் கேட்டு சாரதா வருகிறாள்]

சார: டேய்! என்ன இது! பொழுது விடிஞ்ச வீடு நிர்துளி படுது. காலையிலெழுந்தா ஒரு படிப்பையும் காணும் ஒரு எழுத்தையுங் காணும், இருங்க சொல்றேன்,

[சாரதாவின் அதட்டலைக் கேட்டு உள்ளே இருந்த சிவராம் வெளியே வருகிறார். அவரிடம்] பாருங்க, நீங்க குழந்தை வளர்க்கிற லட்சணத்தை! அதுகளுக்கு செல்லம் கொடுத்து கொடுத்து குட்டிச் சுவராக்கி வச்சிருக்குங்க.

சிவ: டேய் கோபி என்னடா இது!

கோபி: அப்பா, தெரியாம இங்கி விழுந்திடிச்சி அதுக்கு பாருப்பா எப்படி அடிச்சிருக்கான் Fool

ஹரி: நீதாண்டா Fool

கோபி: நீதாண்டா Fool

சிவ: முதல்ல யாரு சண்டை ஆரம்பிச்சது

கோபி: இவன்தாப்பா!

ஹரி: இவன்தாப்பா!

சார: உம்! மத்யஸ்தம் ஆரம்பமாகட்டுமே!

சிவ: உம்! லக்ஷ்மி நீ சொல்லு இவங்க ரெண்டு பேரில் யார் முதலில் ஆரம்பித்தது.

[லக்ஷ்மி கோபியைக் கைவிரலால் சுட்டிக் காட்டுகிறாள்]

சிவ: உம்! கோபி! உனக்கு வரவர கொட்டை துளிச்சு போச்சு வா சொல்றேன். கோலுடன், கோபியை அழைத்துக்கொண்டு அறைக்குள் சென்று, கதவை மூடிக்கொள்கிறார். உள்ளேயிருந்து அடிக்கும் சப்தமும், கோபியின் அலறலும் கேட்கிறது. உடனே சாரதா உள்ளே சென்று பார்க்கிறாள். அங்கே சிவராம் தலையணையைக் கோல் கொண்டு அடிக்க, கோபி அடிவாங்காமல் கத்திக்கொண்டிருப்பதைக் கண்டு சாரதா சிரிக்கிறாள். கோபி அம்மாவைக் கண்டபிறகு எழுந்து வெளியே ஓடிவிடுகிறாள். சிவராம் கோபியைக் காணமல் திரும்ப, அங்கே நின்ற சாரதாவைக் கண்டதும், பேசாமல் அங்கிருந்து நழுவி விடுகிறார்.

பிறகு சாரதா சோறு போடுகிருள். அனைவரும் உண்கின்றனர். உண்வு முடிந்ததும், சிவராம் சுருட்டு எடுக்கிருர்.

சார: உம்! மறுபடியும் ஆரம்பிச்சுட்டிங்களா? இப்படி கொண்டாங்க, எல்லாத்தையும் நெருப்பு வைச்சி கொளுத்திடறேன்.

சிவ: உனக்கேன் சாரதா அவ்வளவு கஷ்டம்! நானே சாயந்திரத்துக்குள் ஒவ்வொன்ருய் நெருப்பு வைச்சி கொளுத்திடறேன்.

சார: சொன்ன கேளுங்க! இல்லேன கோபிக்கு கிடைத்த தண்டனை, உங்களுக்கும் கிடைக்கும்.

சிவ: ஆஹா! அப்போ உள்ளே போகலாமே!

சார: இதோ பாருங்கோ, நம்ம பழக்கம் தானே, நாளேக்கு நம்ம குழந்தைகளுக்கும் வரும்.

சிவ: மகாராணி உத்திரவுபடியே இனிமேல் இந்த சிவராம் சுருட்டுப் பிடிக்க மாட்டான். என்ன சரிதானே.

[என்று கூறிவிட்டு அவள் பார்க்காதபடி ஒரு சுருட்டை எடுத்து வைத்துக் கொள்கிருர்) குழந்தைகள் அங்கு வருகின்றனர்) என்னடா இளம்பலாமா.

கோபி: ஓ!

பள்ளிக்கூடத்தில்

சிவராம் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு வந்து விடுகிருர்.

சிவ: (பையிலிருந்த காசை எடுத்து) இது உனக்கு, இது உனக்கு, இது உனக்கு (என்று மூவர்க்கும் தருகிருர்) கோபி சாயந்திரம் பள்ளிக்கூடம் விட்டதும் குழந்தைகளை பார்த்து அழைச்சிட்டுப் போ, காரு, பஸ், வரப்போவுது.

(என்று கூறுகிருர். பிறகு மூவரும் வகுப்பை நோக்கி ஓடுகின்றனர். சிவராம் ஆபிஸை நோக்கி நடக்கிருர்.]

காட்சி 3

ஆபீஸில்

சென்னை சுந்திரம் செட்டியார் பாங்கியுள் நுழைகிருர் சிவராம். அவர் அப்பாங்கியின் மானேஜர். மானேஜர் உள்ளே நுழைந்ததும், மற்றவர்கள் எழுந்து மரியாதை

செய்கின்றனர். சிவராம் தமது அறைக்குள் சென்று அமர் கிருர். பணியாள் ஒருவன் ஒரு நோட்டுப் புத்தகத்தை நீட்டு கிருன். அதைப் பார்த்து அதில் கையெழுத்திடுகிருர் சிவராம்!

சிவ: அசிஸ்டெண்ட் மானேஜர் இன்னும் வரலையா?

பணி: இன்னும் வரலிங்க.

பணியாள் போகிருன். அப்பாங்கியின் மாடியில், சொந்தக்காரரான சுந்திரம் செட்டியாரின் குடும்பம் இருக் கிறது. எஜமானேப் பார்க்க சிவ்ராம் மாடிக்குச் செல்கிருர்.

மாடியில்

சுந்திரம் செட்டியார் தமது மகன் குமாரைக் கண்டித் துக்கொண் டிருக்கிருர்.

சுந்தி: மணி பத்தரையாச்சி, பள்ளிக்கூடம் போகலே பொழுது விடிஞ்சா பணம், பணம்! பணமென்ன செடி யிலா காய்க்குது, கீழே போய் மானேஜரிடம் கேட்டு வாங் கிக்கோ.

அப்பொழுது மானேஜர் மேலே வந்து வணக்கம் தெரி வித்து அமர்கிருர். குமார் அங்கிருந்து செல்கிருன். திரை யின் பின்னல் நின்றுகொண் டிருந்த தனபால் சைகை செய்து குமாரை அழைக்கிருன். தனபால் குமாரின் மாமன்; கொடியவன். பொருமையின் பிறப்பிடம். பொய், புகை சுருட்டு—இவை அவன் பொக்கிஷம். அவன் பாங்கி யின் உதவி மேனேஜராக இருக்கிருன்.

தன: இந்தா பத்து ரூபாய்! வைச்சிக்கோ. ஒரு லட் சாதி பிரபுவின் மகன் ஐஞ்சுக்கும், பத்துக்கும் கேவலம் ஒரு மானேஜரைக் கேட்க வேண்டிய திருக்குது. எதுக் கெடுத்தாலும் மானேஜர். பொல்லாத மானேஜரைக்கண்டு பிடித்து விட்டார். டாமிட்.

குமா: மானேஜரைச் சொல்லி என்ன மாமா பிரயோ ஜனம்?

தன: வ்ாஸ்தவம்தான்! உங்கப்பாவே, தாழ்ந்து போகும் பொழுது, நீயும் நானும் அவனுக்கு எம்மாத்திரம், ஒரு ஆயிரம் ரூபாய் இருந்தா, உன் மாமன் உன்னை இப்படி ஐஞ்சு, பத்துக்கு அலையவிட மாட்டான்.

குமா: ஆயிரம் ரூபாயா? எதுக்கு மாமா?

தன: நாளைக்கு கடைசி ரேஸு, ஆயிரம் ரூபாய் கட்டினு, பத்தாயிரம் கிடைக்கும்.

குமா: பத்தாயிரமா?

தன: பத்தாயிரம் என்ன, இந்த மூளையை உபயோகிச்சா பத்து லட்சம் கூட கிடைக்கும். டென்லாக்ஸ்!

குமா: அப்போ கட்டேன் மாமா

தன: பணமில்லையே

குமா: வேற வழி

தன: இருக்கு. நீ பள்ளிக்கூடம் போ. அப்புறம்சொல்றேன்: (செல்கிருன்)

சுந்: (சிவராமிடம்) பணம் வரலேன்ன, விடாதிங்க. மயிலே மயிலேன்னு இறகு போடுமா?

சிவ: சரிங்க

(சிவராம் கீழே செல்கிருர்]

பாங்கியில்

தன: டேய்! கழுதை இதாடா பைல்? உனக்கு மூளை இருக்கா? இங்க வாடா, நீ சோறுதானே திங்கிறே!

ப்யூன்: இல்லேங்க! இந்தக் காலத்திலே சோறு எங்க கிடைக்குது? சோளம் புண்ணுக்கு தானே கிடைக்குது.

தன: நீ கெட்ட கேட்டுக்கு ஹாஸ்யம் வேறயா? நான் சென்ஸ், Fool ஸ்டுபிட் கெட் அவுட்.

(அப்பொழுது சிவ்ராம் வருகிருர்)

சிவ: மிஸ்டர் தனபால் கொஞ்சம் இப்படி வரிங்களா?

சிவ்ராமின் பின்னல் தனபால் செல்கிருர். இருவரும் சிவ்ராமின் அறைக்குள் செல்கிருர்கள்.

சிவ: இதோ பாருங்க தனபால், அசிஸ்டெண்ட் மானேஜரான நீங்களே இப்படி ஆபிஸில் சத்தம் போட்டால் மற்றவர் எப்படி நடப்பார்கள்.

தன: அந்த மடையன் பைலே துலேச்சிட்டான்.

சிவ: அதை சாவதானமாக கேட்டால் போகிறது. கழுதை, குதிரை என்ருல் அவர்களுக்கு மனம் புண்

படாதா. பிழைப்புக்காக வரும் ஏழைகள் மீது எரிந்து விழுவதால் என்ன பிரயோசனம்?

தன: இந்த பாங்கிலே ஒரு வேலைக்காரனைக் கண்டிக்கக்கூட எனக்கு அதிகாரம் இல்லை.

சிவ: இல்லையென்று சொல்லவில்லை. அதிகாரம் ஒரு ஆபத்தான ஆயுதம். அதை அவசியமான இடத்தில், அளந்து உபயோகிக்க வேண்டும். அதிகாரம் சாதிக்காததை அன்பு சாதிக்கும். ஆபீஸிலே ஒழுங்கும், கட்டுப்பாடும் இருக்க வேண்டும் என்பதற்காகவே இதைச் சொல்கிறேன். இனி நீ செல்லலாம்.

தன: தாங்ஸ்!

பணப் பெட்டியும் கணக்கும் வருகிறது. சிவராம் கணக்கைப் பார்த்துவிட்டு பணத்தைப் பார்க்கிறார். அதில் இருபது ரூபாய் குறைகிறது. உடனே ரகுவை அழைக்கச் சொல்கிறார். ரகு பயந்த உள்ளத்துடன் உள்ளே வருகிறான்.

சிவ: என்னப்ப, கணக்கிலே இருபது ரூபாய் குறைகிறது.

ரகு: எங்கம்மா படுத்த படுக்கையா யிருக்காங்க. நேத்து ராத்திரி நிலைமை ரொம்ப மோசமாகி விட்டது; எந்த டாக்டரும் 20 ரூபாய் பீஸ் இல்லாமல் வர முடியாது என்று கூறிவிட்டார்கள்.

சிவ: அதற்காக ஆபீஸ் பணத்தில் எடுப்பதா? யாருடைய உப்பை சாப்பிடுகிறோமோ, அவருக்கே துரோகம் செய்வதா?

ரகு: இந்த ஒரு தடவை மட்டும் மன்னித்து விடுங்கள்! இனிமேல் இப்படி செய்யமாட்டேன்.

சிவ: எழுந்திரு! ரகு நீ இருந்த நிலையில் அப்படித்தான் செய்யத் தோணும். என்ன கஷ்டம் வந்தாலும் கடமையை கைவிடாதே! 20 வருஷங்களுக்கு முன் நானும் உன்னைப்போல குமாஸ்தாவாகத்தான் இந்த ஆபீஸிலே நுழைந்தேன். முதலாளி என்னிடம் ஆயிரமாயிரமாக பணம் தருவார். அதை விஷம்போல நினைத்து தீண்டமாட்டேன். என் நாணயத்தைக் கண்டு முதலாளி இந்தத் தங்கக் கடிகாரத்தைபரிசாகத் தந்தார், நீயும் நாணயமாக நடந்தால் இதைப்போல பரிசுஉனக்கும் கிடைக்கும். இந்தா

இந்தப் பணத்தைப் போட்டு, கணக்கை சரிகட்டு. (20 ரூபாய் கொடுக்கிறார்) இந்த உலகத்தில் மனிதனுக்கு நாணயத்தைவிட சிறந்த பொக்கிஷம் கிடையாது. இதை மறக்காதே! ஆமாம் இப்பொழுது உங்கம்மாவுக்கு எப்படி இருக்கிறது.

ரகு: இப்போ தேவலை சார்.

காட்சி 4

[சிவராம் வீட்டில்]

கோபும், ஹரியும் கிரிக்கெட் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். கோபி அடித்தப் பந்து கதவருகில் செல்கிறது. ஆபீஸிலிருந்து அப்பொழுதுதான் வந்த சிவராம், அதை எடுத்துக்கொண்டு வருகிறார்.

சிவ: கோபி! நீ அவுட்! இங்கே கொண்டா பேட்டை. நான் ஆடுகிறேன்.

சாரதா: இதென்ன தெருவிலே கூத்து. யாராவது பார்த்து சிரிப்பாங்க.

சிவா: இந்த காலத்திலே கிரிக்கெட் ஆடலைன்னுதான் சிரிப்பாங்க வேணும்னு நீயும் வந்து ஆடு.

லக்ஷ்மி: போப்பா! பொம்மனாட்டிதான் கிரிக்கெட் ஆடுவாளோ

சார: அப்படிச் சொல்லுமா! நீ சொல்லியாவது உங்கப்பாவுக்குத் தெரியட்டும்.

சிவா: பின்ன என்ன ஆடுவாங்க

லக்ஷ்மி: டான்ஸ்.

சிவா: அப்போ உங்கம்மாவுக்கு டான்ஸ் சொல்லி கொடுக்கட்டுமா? டேய் கோபி போல் பண்ணுடா

[சிவராம் கிரிக்கெட் ஆடுகிறார். அவருக்கு ஆடத் தெரியாததைக் கண்டு மற்றவர்கள் சிரிக்கிறார்கள்.]

சார: தயவு செய்து உள்ளே வாங்களேன். சினிமா ஸ்டாரைப் பார்த்து கூட்டம் போடறாப் போலே, உங்களைப் பார்த்து கூட்டம் போடப் போவுது.

சிவா: சினிமா ஸ்டாரா? அவுங்களுக்கும், நமக்கும் என்ன சம்மந்தம். ஓ! ஒரு வேளை நான் சினிமா ஸ்டார்

ஆயிடுவேன்னு பயப்படறையா. நான் ஒருகாலும் சினிமா ஸ்டார் ஆகமாட்டேன். என் பிள்ளைகளையும் சினிமாஸ்டார் ஆக் விடமாட்டேன். என் குழந்தைகளை சங்கீதப் புலிக ளாக்கப் போகிறேன்.

சார: எங்க குழந்தைகள் புலி, நீங்க சிங்கம், எனக் கென்ன குறைச்சல், உள்ளே வாங்க.

சிவ: டேய் அம்மா கோவிச்சிக்கிருங்க வாங்கடா போகலாம்.

[சாரதாவும், சிவராமும் உள்ளே போகிருர்கள்.]

சார: வர வர சின்ன குழந்தையாகி விட்டீங்க

சிவ: எங்கம்மாவுக்கு நான் குழந்தைதான்.

சார: இப்போ நீங்க மூணு குழந்தைக்ளுக்கு அப்பா, வெட்கமா யில்லே.

சிவ: அப்பாவுக்கு வெட்க மில்லை. அம்மாவுக்குபோ ரொம்ப வெட்கம் அப்படித்தானே.

(தன் கையில் சாரதா என்று பச்சைக்குத்தி யிருக்கும் எழுத்துக்களைப் பார்த்து) என்ன சாரதா சிவராமுக்கு வெட்கமில்லை.

சார: அதோ குழந்தைகள் வருகிருர்கள்.

[கோபி, ஹரி, லக்ஷ்மி உள்ளே பாட்டு பாடிக் கொண்டே வருகிருர்கள்]

சிவ: டேய்! சீக்கிரம் வேறே சொக்கா போட்டுக்கிட்டு வாங்க. பாட்டுக்கு உட்காரலாம்.

[சிவராமும், குழந்தைகளும் பாடுகிருர்கள்.]

காட்சி 5

சுந்திரம் செட்டியார் வீட்டில்

தனபாலின் அறையில் ரேடியோ பாடுகிறது குமா ரும், தனபாலும் அதை தாளம் போட்டு ரசிக்கிருர்கள்.

ஹாலில் ஏதோ படித்துக் கொண்டிருந்த சுந்திரம் செட்டியாரின் காதைத் துளைக்கிறது அப்பாடலும், அமர்க் களமும். அவர் எழுந்து உள்ளே சென்று ரேடியோவை நிறுத்துகிருர்.

சுந்: ஏம்பா, இந்த வீட்டிலே ஒரு நிமிஷம் கூட நிம்மதியா இருக்க விட மாட்டிங்களா? ஏண்டா குமார், இது தான் நீ படிக்கிற லட்சணமா?

தன: குமார் படிச்சிக்கிட்டுத்தான் இருந்தான். நான் தான் சும்மா கொஞ்சம் ரேடியோவை திருப்பி வைச்சி...

சுந்: ரேடியோவை திருப்பின பரவாயில்லையே, அவன் மூளையைக் கூட திருப்பிடுவ போல இருக்குதே.

தன: மூளை என்ன செஞ்சாவைச்சிருக்கு

சுந்: என்ன சொன்னே

குமா: மாமா தான்......

சுந்: அவனுடா மாமன்? துரியதனனுக்கு ஒரு சகுனி போல.

[சுந்திரம் செட்டியாரின் மனைவி அச்சமயம் அங்கு வருகிருள்.]

சு மனை: அவன் துரியோதனன், அவன் சகுனி நீங்க திருதராஷ்டிரன். அவன் உங்க வீட்டிலே இருப்பது இஷ்டம் இல்லேன சொல்லிருங்க. உங்களை சொல்லி என்ன பயன்? அந்த பாழும் தெய்வம்.

சுந்: தெய்வத்தை ஏண்டி திட்டிறே. அது ஒழுங்க வேலை செய்திட்டு இருப்பதை தெய்வமா வேண்டாங்குது?

சு. மனை: அவன் இங்கே சும்மாவா இருக்கிருன்? உடம்பு தேய உங்க ஆபீஸிலே உழைக்கிருன்...அதுக்கு நீங்க இந்த மாதிரி பரிசு தரிங்க.

சுந்: உடம்பு தேய உழைக்கிருன? உனக்குத் தகுந்த தம்பிதான் கிடைச்சிருக்கான். இன்னும் அந்த சிவராம் போல நல்லவன, நாலுபேர் புகழும்படியா, அதோடு யோக்யஸ்தன நாணியமுள்ளவன இருந்திட்ட, உனக்கு தலே காலே தெரியாது. நீயும் உன் தம்பியும் எப்படின போங்க. ஆன எம்புள்ளேயை மட்டும் கெடுத்திடாதிங்க.

(அவர் போகிருர்)

சு. மனை. உங்க பிள்ளை, எனக்கு என்ன சம்மந்தம் இருக்கு? ஆகாசத்திலேருந்து குதிச்சிட்டான்.

[அவளும் போகிருள். குமார் போக முயலுகிருன். தனபால் அவனை போகவிடாமல் தன் அறைக்கு அழைத்துச் செல்கிருன்.]

இரவு மணி பன்னிரண்டு அடிக்கிறது. தூங்கிக்கொண்டிருந்த தனபால் எழுகிருன். குமாரை எழுப்புகிருன். கள்ளமற்ற உள்ளம் கொண்ட குமாரை அக் கொடியவன் திருடச் செல்லும்படி தூண்டுகிருன். குமார் பணம் திருடுகிருன். சொந்த வீட்டிலே, பெற்ற தந்தையின் பணத்தை, தாய் மாமனின் தூண்டுதலால் திருடிவிட்டான். பாவம், சிறுவன் குமார், தனபால் வீசிய வலையில் விழுந்து விட்டான்.

காட்சி 6

சுந்திரம் செட்டியார் வீட்டில்

சுந்திரம் செட்டியார் பணம் திருடுபோனதை அறிந்து தேடி, அலுக்கிருர். அவர் மனைவி மீண்டும் மீண்டும் பணம் வைத்திருந்த பையில் தேடுகிருள்.

சுந்: ஏன் சும்மா தேடறே? பணம் போக வேண்டிய இடத்துக்குப் போய் விட்டது. வெளி திருடஞ யிருந்தா போலீஸிலே பிடிச்சிக் கொடுக்கலாம்.

சு. மனை: எடுத்தா நீங்க எடுக்கணும், இல்லேஞ நான் எடுக்கணும். யாரை போலீஸிலே புடிச்சிக் கொடுக்கப் போறிங்களோ, கொடுங்க.

[மானேஜர் சிவராம் வருகிருர் அவரைக் கண்ட செட்டியாரின் மனைவி முகத்தைச் சுளித்துக் கொண்டு போகிருள்.]

சுந்: வாங்க சிவராம். இந்த வீடு இருக்கிற நிலையை பாருங்க. மறுபடியும் ஆயிரம் ரூபாய், என் பையிலிருந்து காணேம். இப்படியே போயிகிட்டே இருந்தா குடும்பம் குட்டிச் சுவரா போக வேண்டியதுதான்.

சிவ: நீங்க கவலைப் படாதீங்க. நான் கதனிச்சிக்கிறேன்.

காட்சி 7

ரேஸ் கோர்ஸில்

தனபால், குமாருடன் ரேஸ் கோர்ஸில் இருக்கிறார்கள். இரவில் திருடிய பணத்தை தனபால் கட்டி ஆடுகிறான். அவன் குதிரை வெற்றி பெறவில்லை. சோர்ந்த முகத்துடன் குமாருடன் நிற்கிறான். எதிர்பாராத வண்ணம் சிவராம் காரில் வந்து இறங்கி குமாரிடம் செல்கிறார். சிவராமைக் கண்டு பயப்படுகிறான் குமார்.

சிவ: குமார், பயப்படாதே! முனுசாமி, பையனைச் காருக்கழைத்துக் கொண்டு போ.

(முனுசாமி குமாரை அழைத்துக்கொண்டு செல்கிறான்)

சிவ: மிஸ்டர் தனபால், படிக்கிற பையனை இப்படி ரேஸுக்கு அழைத்து வருவது, உங்களுக்கே நல்லா யிருக்கா? இதை உங்க மாமா கேடா அவர் மனசு எவ்வளவு கஷ்டப்படும்.

தன: இங்கேயும் உங்க மானேஜர் அதிகாரத்தைக் காட்ட ஆரம்பிச்சிட்டிங்களா? இது ஆபீஸ் இல்லே ரேஸ் கோர்ஸ், ரேஸ் கோர்ஸ்.

சிவ தெரியும்! குதிரைப் பந்தயத்தால் குபேரன்களெல்லாம் குசேலர்களா யிருக்கிறார்கள். இந்த விபரீத விளையாட்டில் வீட்டை விற்று, நிலத்தை விற்று, கட்டிய மனைவியின் தாலியை விற்று,..... குட்டிச் சுவரான குடும்பங்கள் பல. நெற்றி வியர்வை நிலத்தில் விழ சம்பாதிக்கும் பணமே நிலைத்து நிற்பதில்லை என்றால், இந்த சூதாட்டத்திலே கிடைக்கும் பணமா நிலைத்து நிற்கப் போகிறது. யோசித்துப் பாருங்கள்.

தன: தாங்ஸ்! நல்லது, கெட்டது தெரியாத சின்ன பிள்ளையல்ல நான். நீங்க சொல்லி தெரிஞ்சிக்க வேண்டிய அவசியமே இல்லை.

[தனபால் போகிறான். அவனை அனுதாபத்தோடு பார்க்கிறார் சிவராம்]

காட்சி 8

லீலாவின் வீட்டில்

லீலா தனபாலின் காதலி, அவள் வீட்டிற்கு தனபால் வருகிறான்.

தன: லீலா! மை டார்லிங்! ரேஸிலிருந்து பறந்து வந்த எனக்கு உன் ரோஸ் முகத்தைக் காட்டு...என்ன ஒரு மாதிரியா இருக்கே. என் மேல் கோபமா? என் காதலியைப் பார்க்க வரும்போது, காணிக்கை யில்லாமலா வருவேன்? இதோ பார்! [ஒரு முத்துமாலையை எடுத்துத் தருகிறான்]

லீலா: முத்து மாலையா? என்ன விலை

தன: இரண்டாயிரம் இருபதினாயிரம் உனக்கேன் அந்தக் கவலை. முத்துமாலை மட்டுமா? இன்னும் உனக்கு என்ன வேண்டும் கேள்.

லீலா: எனக்கெப்போதும் என் ராஜா பக்கத்திலேயே இருக்க வேண்டும்.

தன: என் ஆசையும் அதுதான். அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறேன். ஐடியாஸ் ஐடியாஸ் ஆல் ப்ளுமிங் ஐடியாஸ். என் மனதில் ஒரு ஆசை எப்பொழுதாவது ஒரு பில்ம் கம்பெனி ஏற்படுத்தி அதிலே உன்னை கதாநாயகி யாக்கணும்.அப்புறம் நீவெறும் ராணியல்ல, சினிமா ராணி, காரிலே, மாலை நேரத்திலே, மக்கள் வெய்யிலே...ஆனல் என் சுதந்திர வாழ்வுக்குப் நம் சொர்க்கபோகத்திற்கும் குறுக்கே நிற்கிறான் சிவராம்.

லீலா: இந்த நல்ல சமயத்தில் அதெல்லாம் எதற்கு?

தன: லீலா! இன்று என்னை பாம்பே நண்பர் ஒருவர் வந்திருக்கிறார் உன்னை அறிமுகப் படுத்தனம். ஜில்லுன்னு டிரஸ் பண்ணிகிட்டு வா!

தனபாலும் லீலாவும் வருகிறார்கள். தனபாலின் நண்பர் ஹரீஷ்க்கு லீலாவை அறிமுகப்படுத்தி விட்டு அமருகிறார்கள்.

தன: லீலா இவர் தான் என் பாம்பே நண்பர் ஹரீஷ். லீலா மை டார்லிங் லீலா முதலில் உன் அழகிய கரங்களால் டீ. அப்புறம் ஒரு பாட்டு அப்புறங் கொஞ்சம் டான்ஸ்.

லீலா: பம்பாயிலே உங்க நண்பர் பெரிய பெரிய டான்ஸ் எல்லாம் பார்த்திருப்பாரே. என் டான்ஸ் பிடிக்குமோ பிடிக்காதோ!

தன: உன் டான்ஸ் பிடிக்காதவன் மடையன். கலையறிவு இல்லாத கபோதி இல்லே ஹரீஸ்!

ஹரீஷ்: ஆமாம், உங்களுக்கு இந்திஸ்தானி தெரிரிமா?

லீலா: சோடா, சோடா.

தன: லீலாவுக்கு ஐஞ்சு பாஷை சுத்தமா தெரியும்,

ஹரீஷ்: அப்படின்னு ஒரு ஹிந்துஸ்தானி பாட்டு பாடுங்க.

தன: சாவோ. குஷிசே காவோ, பிரேம் சே சாவோ! எப்படி நம்ப இந்துஸ்தானி! எக்கச்சக்கமா பேசுவேன்.

(லீலா பாடிக் கொண்டே ஆடுகிருள்)

காட்சி 9

சிவராமின் வீட்டில்

சிவராம் ஆபீஸிலிருந்து, குழந்தைகளுக்காக நிறைய சாமான்கள் வாங்கிக் கொண்டு வருகிருர். வாசலில் இருந்த குழந்தைகள் எனக்கு எனக்கு என்று கத்துகின்றன. சிவராம் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்களை யெல்லாம் பகிர்ந்து கொடுக்கிருர்.

சார: கடை வீதியே புரண்டு வந்திருக்கே. சம்பளமெல்லாம் தீர்ந்து போச்சா, சாமான் வாங்க ஏதாவ்து மிச்சம் இருக்கா.

சிவ: சம்பாத்தியத்தை யார் செலவழிச்சா. இது போனஸ் பணம், சம்பளம் அப்படியே இருக்கிறது.

சார: அதனல் இப்படி செலவழிக்க வேண்டுமா?

சிவ: சாரதா! அதுகளைப் பார் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிருர்கள். குழந்தைகள் சந்தோஷம் தானே சொர்க்கம்.

சார: சம்பளத்தையும், போனஸையும் செலவழிச்சி நீங்களும், உங்க குழந்தைகளும் சொர்க்கத்துக்குப் போங்க. மாதக் கடைசியில் உப்புக்கும், பருப்புக்கும் நான் ஊர் கோலம் போகிறேன்.

சிவ: போகலாமே! (புடவையை எடுத்து சாரதா விடம் கொடுக்கிறார் சிவராம்)

சார. பெங்களூர் பட்டுப் புடவையா. நல்லா யிருக்கே—இவ்வளவுதானா, இன்னும் இருக்கிறதா?

சிவ: இன்னும் இருக்கிறது. இது உனக்கு. (வேறு துணியை எடுத்துக் கொடுத்து) இது குழந்தைகளுக்கு (வேறொரு பொட்டலத்தைப் பிரித்து துணியைக் காட்டி) இது எனக்கு. (பாக்கெட்டிலுள்ள பணத்தை எடுத்துக் கொடுத்து) இது நமக்கு.

கோபி, ஹரி, லக்ஷ்மி ஆகிய மூவரும், சிவராம் வாங்கி தந்த பொருள்களுடன் அங்கே வருகிறார்கள். லக்ஷ்மி அப்பாவிடம் செல்கிறாள்.

லக்ஷ்மி: அப்பா! எங்க ஸ்கூல்லே டிராமா போடறாங்கப்பா. கோபிக்கு, ஹரிக்கு, எனக்கு வேஷம் இருக்கு, நீயும் அம்மாவும் வரணும்பா.

சிவ: லக்ஷ்மி, அம்மாவுக்கும் எனக்கும் வேஷம் வாங்கித்தரியா.

சார: அது ஒண்ணுதான் குறைச்சல், வீட்டிலே போடும் வேஷம் போறாதா.

காட்சி 10

பொங்கல் திருநாள். மங்கையர்கள் தங்கள் இல்லங்களிலும், வெளியிலும் தீப அலங்காரம் செய்து, மகிழ்வுடன் பாடி, ஆடுகின்றனர்.

காட்சி 11

[நாடகக் கொட்டகையில்]

நாடகக் கொட்டகையில் கூட்டம் நிறைந்திருக்கின்றது முன் வரிசையில் சிவராமும், சாரதாவும் அமர்ந்திருக்கின்றனர், மேடையில் ஆசிரியர் தோன்றுகிறார்.

ஆசி: பெரியோர்களே, சகோதரர்களே இன்று பொங்கல் புதுநாள். தமிழரின் இன்பத் திருநாள். இந்நாளில் பள்ளி மாணவர்கள் லவ-குச நாடகம் நடிக்கப் போகிறார்கள். இதில் சுந்திரம் செட்டியார் பாங்கி மானேஜர் குழந்

தைகள் முக்கிய பாத்திரம் ஏற்று நடக்கிறார்கள். பார்த்து குழந்தைகளை ஆசீர்வதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(திரை தூக்கப் படுகிறது நாடகம் தொடங்குகிறது)

[நாடகம் நடந்துகொண் டிருக்கும்போது ஒருவன் வந்து சிவராம் காதில் ஏதோ ரகசியமாகச் சொல்கிறான். உடனே சிவராம், சாரதாவை அழைத்துக் கொண்டு வெளியே வருகிறார்.]

சிவ: முதலாளி ஏதோ அவசர காரியமாக கூப்பிட் டிருக்கிறார், நான் போகணும்.

சார: இந்த ராத்திரி வேளையில் அப்படி என்ன அவசர காரியம்.

சிவ: அதுதான் எனக்கும் தெரியல்லே. ஆபீஸிலே ஏதாவது கெடுதி நடந்திருக்கும்னு தோணுது. நீ நாடகம் முடிந்ததும் குழந்தைகளை அழைத்துக்கொண்டு வீட்டுக் குப் போ. நான் சீக்கிரம் வருகிறேன்.

காட்சி 12

செட்டியார், வீட்டு மாடியில் தனம்மாளுடன் பேசிக்கொண்டிருக்கிறார்.

தன: இந்த மாதிரி முக்கிய காரியத்திற் கெல்லாம் சொந்த மனுஷ்யனை அனுப்பறதுதான் நல்லது. பேசாம நம்ம தனபாலை அனுப்புங்களேன். வெட்டிண்டு வான்னா கட்டிண்டு வருவான்.

சுந்: தனபாலை அனுப்பறதா! என்ன அற்புதமான யோசனை? உம். உன் மூளைக்கு தங்க கவசம்தாண்டி பண் ணிப் போடணும். இதோ பார். உனக்குக் கடைசி தடவை யாகச் சொல்றேன். வியாபார விஷயத்திலே எல்லாம் நீ தலையிடாதே!

[சிவராம் வருகிறான். சுந்தரம் செட்டியாரின் அறைக் குள் நுழையவும் அவனை வரவேற்று செட்டியார் விஷயத் தைச் சொல்கிறார்.]

சுந்: வாங்க மிஸ்டர் சிவராம். உட்காருங்கள். இரவு இத்தனை நேரத்திலே உங்களை கூப்பிட்டிருக்க மாட்டேன் ஆனால் ரொம்ப அவசர வேலையாக உங்களை உடனே பம் பாய்க்கு அனுப்பவேண்டி யிருக்கு.

சிவ: பம்பாய்க்கா ஸார்?

சுந்: ஆமாம்! நாளைக்கு மறு தினத்திலேருந்து தங்கம் விலை ஏறப்போறதாம். அதுக்குள்ளே நமக்கு ஏதாவது ஸ்டாக் வேணு'மான்னு நம்ப பம்பாய் டீலர் 'டிரங்'கிலே கேட்டான். நமக்காக ஐந்து லக்ஷ ரூபாய் தங்கம் எடுத்து வைக்கும்படிக்கும் உங்களை உடனே பணத்தோட அனுப்பறதாகவும் சொல்லியிருக்கேன். நீங்க இன்னி ராத்திரி மெயிலிலேயே புறப்படணும். பாருங்க எனக்கு வேறு யாரிடத்திலேயும் நம்பிக்கையில்லே! அதனலே தான் உங்களை தொந்தரவு பண்ண வேண்டியிருக்கு. இதோ செக்.

[செக் கொடுக்கிறார். இதையெல்லாம் மறைவிலிருந்து தனபால் கவனித்துக்கொண்டிருக்கிறான்.

சிவ: உங்க நம்பிக்கையை காப்பாத்திக்க என் உயிரைக்கூடக் குடுப்பேன் ஸார்—ஆனா நீங்க கொடுக்கிற தொகை பெரிசு! பம்பாய் வியாபாரம் எனக்குப் பழக்கமில்லே! அதனலேதான்......

சுந்: அதனலே பாதகமில்லே. மிஸ்டர் சிவராம்! பம்பாய்க் கடையிலேயும் நம்ப தமிழ் குமாஸ்தாக்கள் இருக்காங்க...இதோ இந்த ஓட்டலிலே தங்குங்க (ஒரு விலாசத்தைக் கொடுக்கிறார்) எல்லா சௌகர்யமும் கிடைக்கும். உங்க செலவுக்கு இந்த ஆயிரம் வச்சுக்குங்க! ஜாக்ரதையா போயிட்டு வாங்க!

சிவ: ஏதோ என்னலே முடிஞ்ச வரையில் வேலையை ஜாக்கிரதையா முடிச்சுண்டு வரேன் ஸார்! உங்க ஆசீர்வாதம்.

சுந்: என் ஆசீர்வாதம் எதுக்கு மிஸ்டர் சிவராம்? உங்களைப் போல நல்ல மனுஷாளுக்கு ஆண்டவன் ஆசீர்வாதம் எப்பவும் இருக்கு!

[சிவராம் தான் உடனே பம்பாய் போகவேண்டியதைச் சொன்னதும் சாரதா திடுக்கிடுகிறாள்.]

சார: பம்பாயா...?

சிவ: ஆமாம் சாரதா! இன்னி ராத்திரி வண்டியிலேயே பம்பாய் போகணும்......

சார: பம்பாயிலே அப்படியென்ன அவசர வேலை?

சிவ: முதலாளிக்கு ஐந்து லக்ஷ ரூபாய் தங்கம் வாங்கணும்! இதோ செக் (செக்கை எடுத்துக் காட்டுகிறன்.) அதெல்லாம் பிறகு சொல்றேன்...முதல்லே என் துணிமணிகளை யெல்லாம் 'டிரங்'குலே எடுத்து வை...! நான் குழந்தைகளை பார்த்துட்டு வரேன்.

[சிவராம் பம்பாய் புறப்படுவதை யறிந்த தனபால் சதி திட்டமிட்டு லீலாவை பம்பாய்க்குப் போகச் சொல்கிறன்.]

தன: லீலா! ஜாக்கிரதை! எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டேன் ஹரீஷுக்கும் டெலிபோன் செய்தாகி விட்டது. அபாயமான வேலை! சாமர்த்தியமாக வீசுவோம் வலை! அப்புறம் தீர்ந்தது பணக் கவலை! இதில் நீ வெற்றி பெற்றல் காத்திருப்பது இன்ப போகம். அப்புறம் நீ ஒரு ராணி. நான்...

லீலா: ராஜா!

தன: ஹஹ்...ஹ.. ஹா! இந்தப் பணம் கிடைத்ததும் இந்த ஊருக்கு வெகு சீக்கிரம் ஒரு புது சினிமா கம்பெனி. லீலா-தனபால் பிலிம் கம்பெனி. அப்புறம் ஒரே ஷூட்டிங் ரிலீஸ் கரகோஷம் ஹஹ்...ஹ...!

உமாபதி: அட அட அட என்ன அமக்களம் போங்க!

தன: சீ!

உமா: பிரயாணத்துக்கு எல்லாம் ரெடி! கார்கூட வந்தாச்சு

தன: டேய், உமாபதி! உன் பங்கையும் சரிவர செய்யல்லே. உன் இன்னொரு காலையும் உடைச்சுப் போடுவேன்.

உமா: பார்க்கறதுக்குப் பூனையா யிருந்தாலும் பாய்ச்சல்லே புலிங்க

தன: தெரியுது? தெரியுது!

உமா: எஜமான்! பம்பாயிலே கைச் செலவுக்கு...

* * *

[சிவராம் வீட்டு வெளியில் குழந்தைகள் பெட்டியை காரில் வைத்துக்கொண்டிருக்கும்போது அபசகுனம் போல ஒரு பெட்டி விழவே சாரதா பதறிப் போகிறள்.]

சார: ஹா! இதென்ன புறப்படும்போது அபசகுனம் கொஞ்சம் உள்ளே வாருங்கள். கையை காலே அலம்பிண்டு ஸ்வாமியை வேண்டிண்டு போகலாம்.

சிவ: மறுபடியும் இதென்ன கண்ணீர் சாரதா?

சார: என் மனம் என்னமோ ஒரு நிலேயில் இல்லே. ஏதோ பயமா யிருக்கு.

சிவ: பைத்தியம்! மூன்று நாளில் திரும்பிவிடப் போகி றேனே. பயமென்ன இதிலே?

சார: என்னவோ! இத்தனே வருஷங்களில் ஒரு நாளா வது உங்களே விட்டுப் பிரிந்து இருந்ததில்லே. எனக்கென் னமோ ரொம்ப வேதனேயா யிருக்கு.

சிவ: அந்த வேதனே எனக்கு மாத்திரம் இல்லேயா சாரதா? ஆனுல் உத்தியோகக் கடமை. போவதை தவிர்க்க முடியுமா? மூன்றே நாட்கள். ஏதோ சந்தோஷமாய் விடை கொடு சாரதா. எங்கே கொஞ்சம் சிரி பார்க்கலாம்.

சார: (லேசாகச் சிரித்துக் கொண்டு) ஜாக்கிரதையாய் போய் வாருங்கள்,

சிவ: (குழந்தைகள் பக்கம் திரும்பி) நான் இல்லாத போது அம்மாவைப் படுத்தாம செல்றதைக் கேட்டுண்டு சமத்தா இருக்கணும். என்ன ? நான் பம்பாயிலிருந்து வர போது உனக்கு ஒரு பிடில். உனக்கு ஒரு மிருதங்கம். உனக்கு ஒரு தம்புரா வாங்கிண்டு வரேன். அதெல்லாம் வச்சுண்டு நீங்க மூணு பேருமா கச்சேரி பண்ணுவீர்களாம். நான் பார்ப்பேனும். ஆமாம். சாரதா உனக் கென்ன வேண்டும்?

சார: எனக்கு என்ன வேணும்? நீங்க சீக்கிரம் திரும்பி வரவேணும்!

சிவ: ஹூம் ஹூம் முடியாது! கொஞ்சத்திலே திரும்ப மாட்டேன். ரொம்ப நாளாகும்.

சார: ஹா! என்ன?

சிவ: பைத்தியமே! விளேயாட்டுக்காகச் சொன்னேன். உன்னேயும் குழந்தைகளேயும் விட்டு என்னிக்காவது நான்

பிரிந்திருந்ததுண்டா? பிரிந்திருக்க முடியுமா? நான் வரட்டுமா? (காரில் ஏறிக் கொள்கிருர். கார் புறப்படுகிறது. சாரதாவும் குழந்தைகளும் வாசலிலே நின்று பார்த்துக் கொண்டிருக்கின்றனர். தெரு விளக்கு அணைகிறது. அந்தகாரம் சூழ்கிறது.

காட்சி 13

சென்ட்ரல் ஸ்டேஷன் பிளாட்பாரம். சிவராம் தன் பெட்டியுடன் கம்பார்ட்மெண்டில் ஏறி உட்காருகிருன். அதே சமயம், லீலாவின் வேலைக்காரர்கள் லீலாவின் பெட்டியையும் அதே கம்பார்ட்மெண்டினுள் வைக்கின்றனர். லீலாவும் ஏறி உட்காருகிருள். வண்டி கிளம்புகிறது.

ரயில் புறப்பட்டதும், சிவராமுடன் வலுவில் பேச்சுக் கொடுக்கிருள் லீலா.

லீலா: புஸ்தகம் ஏதாவது படிக்கிறீங்களா?

சிவ: வேண்டாங்க, தாங்ஸ்!

லீலா: விளக்கு இருக்கிறதுனுலே உங்களுக்கு ஏதாவ்து...?

சிவ: பாதகமில்லே.

இரவு கழிந்து மறு நாள் பொழுது புலரும்போது லீலா சிவராமிடம் மீண்டும் பேச்சு கொடுக்கிருள்.

லீலா: குட் மார்னிங்!

சிவ: நமஸ்காரம்!

லீலா: ராத்திரி நல்லா தூங்கினீங்களா?

சிவ: சுமாராத் தூங்கினேன்.

லீலா: நீங்க எது வரைக்கும் போறீங்க!

சிவ: பம்பாய்க்கு போயிண்டிருக்கேன்.

லீலா: பம்பாய்க்கு போறது இதுதான் முதல் தடவையா, இல்லே ஏற்கனவே...?

சிவ: இல்லே, இதுதான் முதல் தடவை. இது வரையிலே நான் ஊரை விட்டே கிளம்பினதில்லே!

லீலா: ஓஹோ! பம்பாயிலே உங்களுக்கு வேண்டியவங்க யாராவது இருக்காங்களா?

சிவ: ஒருத்தருமில்லே! நான் ஆபீஸ் காரியமாப் போறேன். ஹோட்டல்லேதான் தங்கணும்! எங்க புரொப் ரைட்டர்கூட ஏதோ அட்ரஸ் கொடுத்தார். (கார்டை காண் பித்துக் கொண்டே) ராயல் ஹோட்டலாம்.

லீலா: ஓ! ராயல் ஹோட்டலா! நானும் அங்கேதான் தங்கப் போறேன்.

சிவ: நீங்க பம்பாய்க்கு என்ன வேலையா போறீங்கன்னு சொல்லலையே?

லீலா: அங்கே என்னுடைய டான்ஸ் கத்துண்ட சிநேகிதி ஒருத்தி யிருக்கா. அவ கோபிநாத் ட்ரூப்போட இங்கிலண்டுக்கும், அமெரிக்காவுக்கும் போப் போறாளாம்! போறதுக்கு முன்னே அவளை ஒருதடவை பார்த்துட்டு வரலாம்னு போறேன்.

சிவ: ஓ! உங்களுக்கு நாட்டியம் தெரியுமா? எனக்கு நாட்டியம்னு ரொம்பப் பிடிக்கும்.

லீலா: நல்ல வேளையாப் போச்சு. உங்களுக்கு நாட்டிய மாவது பிடிச்சிருக்கே.

சிவ: அதென்ன, அப்படிச் சொல்றீங்க? பாட்டும் நாட்டியமும் பிடிக்காதவர்கள்கூட இருக்காங்களா என்ன? என் குழந்தைகள் கூட ஆடும், பாடும். நானும் ஏதோ கொஞ்சம் பாடுவேன்!

லீலா: ஓ! பலே, பலே! நான் பாட, நீங்க ஆட, ஹூம் ஹூம்! நீங்க பாட நான் ஆட பம்பாயிலே டயம் சிட்டாப் பறக்கும்.

வண்டி பம்பாயை அடைகிறது. எல்லோரும் இறங்கு கிறார்கள். லீலாவின் ஆட்கள் அவள் பெட்டியை இறக்கும் போது அவள் சிவராமையும் தன்னோடு வரும்படிச் சொல்லி, அவருடைய பெட்டியையும் தன்னுடைய ஆட்க ளைக் கொண்டே தூக்கிவரச் சொல்லுகிறாள்.

லீலா: அடேடே! இதென்ன உமாபதி! இவர் பெட்டி படுக்கையும் இறக்கு.

உமா: அட அட அட. என்ன அமக்களம் போங்க! எனக்கா சொல்லணும்.

ஹரீஷ் வருகிறான். லீலா அவனையும் சிவராமையும் அறிமுகப்படுத்துகிறாள்.

லீலா: இவர்தான் மிஸ்டர் ஹரீஷ்! பம்பாயிலே பெரிய பெரிய வியாபார மெல்லாம் பண்ணிண்டிருக்கார். என் சிநேகிதி மேல்நாட்டுப் பிரயாணத்துக்கு எல்லா ஏற்பாடும் செய்தது இவர்தான். அவர்தான் மிஸ்டர் சிவராம்! ஹரீஷ்! இவர் பிஸினஸ் விஷயமா வந்திக்கார். இவர் இல்லாமற் போனா எனக்கு பிரயாணம் ரொம்ப அலுப்புத் தட்டியிருக்கும்! இவரும் ராயல் ஹோட்டல்லேதான் தங்கப் போறார்.

ஹரீஷ்: ஹோ! அப்படியா! முதல்லே நீங்க நம்ம காரிலே லீலாவோட ஹோட்டலுக்குப் போங்க! நான் பின்னாடி வரேன்.

சிவ: இல்லே நான்...

லீலா: சும்மா வாங்க.

ஹரீஷ்: பல்தேவ்! முதல்லே இவங்களை நம்ப கார்லே கூட்டிண்டு போ!

பல்தேவ்: ஓ. கே!

ஹோட்டலுக்கு லீலா, சிவராம் வருகின்றனர்.

லீலா: ரூம்ஸ் ஏதாவது காலி யிருக்கா?

ஹோ-மனேஜர்: டபிள் ரூம்தானே...

லீலா: ஆமாம், டபிள் ரூம்தான்.

ஹோ-மா: மெட்ராஸ்லேருந்து வர மிஸ். லீலாதேவிக்கு மிஸ்டர் ஹரீஷ் ஒரு டபிள் ரூம் ரிஸர்வ் பண்ணியிருக்கார்.

பல்தேவ்: இவங்கதான் மிஸ். லீலாதேவி!

ஹோ-மா: ஓ! வணக்கம்!

லீலா: எங்க சாமான்களை ரூமுக்கு அனுப்பிடுங்க!

சிவ: ஸார்! எனக்கு...ஒரு ஸிங்கள் ரூம் கொடுத்துடுங்க.

லீலா: சரி, அப்படியே கொடுங்க.

ஹோ. மா: பாய்! இந்த அம்மாவுக்கு 14-ம் நெம்பர் ரூமும். ஐயாவுக்கு 16-ம் நெம்பர் ரூமும் கொடு. போ!

பாய்: வாங்க ஸார்!

ஹோட்டல் மாடிக்குப் போகின்றனர்.

பாய்: (சிவராமிடம்) இதோ உங்க ரூம்!

லீலா: நாங்க எங்க ரூமுக்கு போறோம், அப்புறம் பார்க்கலாம்.

சிவ: சரி!

காட்சி 14

சிவராம் வீடு. கோபி, ஹரி, லக்ஷ்மி மூவரும் பள்ளிக்கூடம் புறப்படத் தயாராக இருக்கின்றனர். லக்ஷ்மி தூணருகில் பேசாமல் நிற்கிருள். கோபி அம்மாவிடம் காசு கேட்கும்படி அவளைக் கிண்டிவிடுகிறுன்.

சாரதா: கோபி! ரோடிலே மோட்டார் பஸ்ஸெல்லாம் ஏகமா வரும். குழந்தைகளை ஜாக்கிரதையா பார்த்து அழைச்சிண்டு போ! பள்ளிக்கூடம் விட்டதும் நேரா வீட்டுக்கு வந்து சேருங்கோ.

சார: என்ன லக்ஷ்மி! ஏன் நிக்கறே?

லக்ஷ்மி: காசு!

சார: காசா. எதுக்கு? ஏண்டா! குழந்தையை கிளறிவிட்டு வேடிக்கை பார்க்கிறீங்களா! அப்பா ஊருக்கு போகச்சே தானே ஆளுக்கு இரண்டணு கொடுத்தார்?

கோபி: நாங்க ஒண்ணும் அவளை கேக்கச் சொல்லலை. தினம் ஸ்கூலுக்குப் போகச்சே அப்பா கொடுப்பாங்க. அவ கேக்கரு. இல்லேடா ஹரி! (ஹரியை இடிக்கிருன் கோபி.)

ஹரி: ஆமாம்மா!

சார: சரி! வேலிக்கு ஓணன் சாட்சி! நல்லா பழக்கி வச்சிருக்கா உங்கப்பா உங்களை! இந்தாங்க......[காசு கொடுக்கிருள்]

மூவரும்: வறோம்மா!

காட்சி 15

ஹோட்டல் அறையில் சிவராம் வீட்டுக்கு கடிதம் எழுதிக்கொண்டிருக்கிருன். அதே சமயம் லீலாவின் அறையில் லீலா, ஹரீஷ் இருவரும் கூடி யோசிக்கின்றனர்.

லீலா: மனுஷன் சுத்த பத்தாம் பசலி பேர்வழி! வண்டியிலே வரும்போதெல்லாம் வீட்டைப் பற்றியே பேசிண்டு வந்தான். இங்கே ஒரு நாளைக்கு மேலே தங்கமாட்டான் போலிருக்கு. வேலே சீக்கிரம் முடியணும்.

ஹரி: நான் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்துட்டேன். இனிமேல் எல்லாம் உன் கையில்.

லீலா: என் கையில்! என் கையில் அவன் ஒரு பிரம்பு! இஷ்டப்படி வளைப்பேன்!

உமா: அட அட! என்ன அமக்களம் போங்க! அம்மாவை நீங்க என்ன நினைச்சீங்க?

லீலா: சூ! முதல்லே நான் அவன் ரூமுக்கு போறேன். அப்புறம் நீங்க வாங்க!

சிவராம் அறையில் சிவராம் பாடிக்கொண்டிருக்கிறார். லீலா வருகிறாள்.

லீலா: (கையைத் தட்டிக் கொண்டே) பாட்டு ரொம்ப பிரமாதமா யிருக்கே. வண்டியிலே நீங்க பாடுவேன்னு சொன்ன போது உங்க சாரீரம் இவ்வளவு அழகாயிருக்கும் என்று நான் நம்பவேயில்லே.

சிவ: இவ்வளவு புகழ்ச்சிக்கு நான் தகுதியில்லே. உட்காருங்க!

லீலா: உங்கள் தகுதி உங்களுக்கு எப்படித் தெரியும்? யாரிடமும் சகஜமாகப் பழகாத என் மனதையே கொஞ்சம் கொஞ்சமாகப் பிடித்திழுக்கிறீர்களே. மிஸ்டர் சிவராம்!

சிவ: நானு, உங்க மனசையா, நீங்க சொல்றது என்னனு?

லீலா: உங்க சங்கீதத்தைச் சொன்னேன் மிஸ்டர் சிவராம்! அதன் கவர்ச்சியி லிருந்து யார் தப்ப முடியும்? ஆமாம், எங்கேயோ கிளம்பறாப் போலிருக்கே.

சிவ: முதல்லே வந்த வேலேயைப் பார்க்க வேண்டாமா?

லீலா: வேண்டியது தான். அப்புறம்?

சிவ: வீட்டுக்குத் திரும்ப வேண்டியது தான்!

லீலா: எப்பொழுது பார்த்தாலும் வீடு வீடு வீடு! சதா வீட்டையும், குழந்தைகளையும், பெண்டாட்டியையும் பற்றியே பேச்சா? நாகரீகம் முற்றின இந்தக் காலத்திலே இப்படி ஒரு மனுஷனு!

சிவ: வீட்டையும், குழந்தைகளையும் நினைப்பது அநாகரீகமா?

லீலா: அதற்குச் சொல்லலை மிஸ்டர் சிவராம்! நாட்டியம்னு உங்களுக்குப் பிடிக்கும்னு சொன்னீர்களே. நாளை என் சிநேகிதி டான்ஸுக்கு நீங்க கண்டிப்பா இருந்துட்டு தான் போகணும்.

சிவ: இருக்கணுங்கிற ஆசை தான். ஆனு, நான் வந்த காரியம் இன்னும் ஒரு மணி நேரத்திலே முடிஞ்சிடும்; அப்புறம் கடைப்பக்கம் போய் வாங்கறதை வாங்கிட்டா நாளை காலை டிரெயினுக்கே புறப்பட்டுடலாம்னு இருக்கேன்.

லீலா: நாளை காலை வண்டிக்கா?

முன்னேற் பாட்டின்படி அப்பொழுது ஹரீஷ் வருகிருன்.

லீலா: என்ன ஹரீஷ். அவரை டான்ஸுக்கு கூப்பிட வந்துட்டு அங்கே போய் உட்கார்ந்திட்டிங்களே? இவர் நாளை காலை வண்டியிலேயே கிளம்பறேங்கருர்.

ஹரீஷ்: ஹா! இவர் கிளம்பறேன்னு நாம்ப விட்டுடறமா? என்ன மிஸ்டர் சிவராம்! உங்களைப் போல ரஸிகர்களெல்லாம் எங்களை ஆதரிக்க மறுத்தா எங்கள் லட்சியங்களெல்லாம் எப்படி நிறைவேறும்? நீங்க நாளை டான்ஸுக்கு கண்டிப்பா இருந்துட்டுத்தான் போகணும்.

லீலா: நாளை வரைக்கும் இருக்கறதுக்கும் இல்லையாம், ஹரீஷ்!

ஹரீ: அப்போ இன்னிக்கு நம்ம வீட்டிலே டான்ஸ் ஏற்பாடு பண்ணிட்டாப் போவுது.

லீலா: அப்படி சொல்லு, ஹரீஷ்! நீ நினைத்தால் எந்தக் காரியம் தான் முடியாது?

சிவ- நான் மறுபடியும் சொல்றேன். எனக்காக ஏன் இவ்வளவு கஷ்டம்?

லீலா: நீங்க அப்படிச் சொல்லக் கூடாது சிவராம். நம்ம ஹரீஷ் எப்படிப் பட்டவர்ங்கிறது உங்களுக்கு இன்னும் தெரியாது. எங்களுக்கு ஒருத்தர் மேலே பிரியம் விழுந்துட்டா அவரைக் கொஞ்சத்திலே விட மாட்டோம்.

சிவ: இதெல்லாம் என் அதிருஷ்டம்!

லீலா: சே சே! அதிருஷ்டம் எங்களுக்குத்தான். அப்போ நீங்க போய் ஒங்க வேலையை முடிச்சிண்டு வாங்க! அப்புறம் ஊரெல்லாம் ஒரு தடவைச்சுத்திப் பார்த்துட்டு சாயங்காலம் ஹரீஷ் வீட்டு டான்ஸுக்குப்போவோம் சரிதானே!

சிவ: எனக்கு...

லீலா: எனக்குமாச்சு உனக்குமாச்சு! சொல்றபடி செய்யுங்க.

லீலா, உமாபதிக்கும், ஜூடுப் சிங்கிற்கும் சிவராமைப் பின் தொடரும்படி கொஞ்சம் பணம் கொடுக்கிறாள். அவர்களும் போகிறார்கள்.

சிவராம் ஸேட் கடையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறான்.

ஸேட்: சுந்தரம் செட்டியார் சௌக்கியமா யிருக்கிறாரா?

சிவ: கடவுள் கிருபையால் சௌக்கியம்தான்! நீங்க சமயத்திலே போன் பண்ணினத்துக்கு நன்றி தெரிவிக்கச் சொன்னார்.

ஸேட்: அது என் கடமை! வியாபாரம் கிடக்கட்டும். சுந்தரம் செட்டியாரும் நானும் எவ்வளவு நாள் சிநேகிதம்! தங்கத்துக்கு வியாபாரிகள் போட்டி ரொம்ப பலமாயிருக்கு விலை எதுவானாலும் சரி, வாங்கிக்க தயாராயிருக்கிறாங்க. ரொம்ப நல்லது...உங்களுக்கு வேண்டிய சரக்கை அதோ தயாராக எடுத்து வச்சிருக்கேன்.

சிவ: ரொம்ப தாங்ஸ்! இதோ செட்டியார் கொடுத்த செக் (செக்கைக் கொடுக்கிறான்.) நம்ப கடையைக் கொஞ்சம் 'டிரங்'குலே கூப்பிடுங்க.

ஸேட்: என், நீங்க உடனே கிளம்பலே?

சிவ: உடனே கிளம்பத்தான் போறேன். இருந்தாலும் செட்டியார் ரொம்ப கவலையாக யிருப்பார். தங்

கம் வாங்கின விஷயத்தைச் சொல்லி விட்டா ஆறுதலா யிருக்கும்.

ஸேட்: உங்கமாதிரி கடமையிலேயே கருத்துள்ளவர் இந்த காலத்தில் ரொம்ப அபூர்வம்.

ஸேட் தன் குமாஸ்தாவிடம் சுந்தரம் செட்டியாருக்கு ஒரு 'டிராங்கால்' 'புக்'பண்ணச் சொல்கிறார். டெலிபோனில் சிவராம் தங்கம் வாங்கின விவரத்தைத் தெரிவிக்கிறான். அத்துடன்தான் மறுநாள் புறப்படுவதாகவும் சொல்கிறான்.

உமாபதியும், ஜம்புப்சிங்கும் வெளியே யிருந்து அங்கே நடப்பவைகளை மறைவிலிருந்து கவனிக்கின்றனர்.

வியாபாரத்தை முடித்துக் கொண்டு தங்கத்துடன் திரும்பிய சிவராம் ஹோட்டலில் தன் அறையில் கணக்குப் பார்த்துக்கொண் டிருக்கிறான். லீலா வருகிறாள்.

சிவ: நீங்களா? வாங்க!

லீலா: வாங்கோ, போங்கோ! இவ்வளவு தூரம் பழகி னப்புறம் இந்த வீண் மரியாதை யெல்லாம் எதுக்கு?

சிவ: என்னதான் பழகினாலும் மரியாதையை மறக்க லாமா?

லீலா: இனிமே அப்படி யெல்லாம் கூப்பிட்டா எனக்கு கோவம் வரும்!

சிவ: ஓஹோ! அப்ப மரியாதையா கூப்பிடறதில்லே லீலா! சரிதானே?

லீலா: அப்ப சரி!

லீலா: ஒங்க வேலே முடிஞ்சுதா?

சிவ கடவுள் கிருபையாலே முடிஞ்சுது!

லீலா: அப்ப நாம் புறப்பட வேண்டியதுதான்!

லீலாவின் வற்புறுத்தலினால் சிவராம் அவளுடன் ஹரீஷ் வீட்டுக்குச் செல்கிறான். தங்கம் வைத்துள்ள தோல் பெட்டியையும் கூடவே எடுத்துச் செல்கிறான். ஹரீஷ் அவர்களை வரவேற்கிறான்.

ஹரீ: வாங்க, வாங்க! உங்களுக்காகத்தான் காத்துக் கிட்டிருக்கோம்.

லீலா: தாமதம் என்னுலேதான். அவர் மேலே பிச கில்லை.

ஹரி: இவங்கள்ளாம் என் பிரண்ட்ஸ் — இவர்தான் மிஸ்டர் சிவராம்.

மற்றவர்கள்: நமஸ்தே!

சிவ: நமஸ்தே!

சிவ: ஏற்பாடுகள் ஏதோ பலமா யிருக்கே!

ஹரி: பலமான ஏற்பாடு ஒண்ணுமில்லே. ஒரு சின்ன டீபார்ட்டி, டான்ஸ்.

சிவ: எனக்கு எதற்கு இவ்வளவு உபசாரம்? நான் ஒரு சாதாரண மனுஷன்.

ஹரி: நீங்க அப்படிச் சொன்னு நாங்க ஒப்புக்கவே மாட்டோம்! உங்க மதிப்பு எங்களுக்கு நல்லாத் தெரியும்.

லீலா: ஹரீஷ்! டான்ஸூக் கெல்லாம் ரெடியாயிருக் கா? பாவம் இவர் ரொம்ப களேச்சுப் போயிருக்கார். சீக்கி ரம் புரோகிராம் ஆரம்பிக்கணும்!

ஹரி: எல்லாம் ரெடியா யிருக்கு! பல்தேவ்! டீயான வுடனே டான்ஸ் ஆரம்பிக்கணும்!

பல்தேவ்: ஓகோ!

டான்ஸ் நடக்கிறது. யாவரும் ரஸிக்கின்றனர். சிவ ராம் மெய்ம் மறந்த நிலேயிலிருக்கிருன். டான்ஸ் முடிந்த வுடன் சிவராமைத் தட்டிக் கொண்டே லீலா எழுந்திருக் கிருள். ஹோட்டலுக்கு இருவரும் புறப்படுகிருர்கள்.

ஹோட்டல் அறைக்கு வந்ததும் சிவராமின் கையி லிருந்து அவன் பெட்டியை வாங்கிக் கொள்கிருள் லீலா.

லீலா: அப்ப! என்ன கனம்? இந்தப் பெட்டியில் என்ன தானிருக்குமோ?

சிவ: சொல்லட்டுமா லீலா!

லீலா: இஷ்டமிருந்தா சொல்லுங்கோ.

சிவ: உன்னைப் போல ஒரு வஸ்து!

லீலா: உம்!

சிவ: தங்கம்! அஞ்சு லக்ஷ ரூபாய், தங்கம் இதிலிருக் கின்றது.

லீலா: ஐந்து லக்ஷ ரூபாய் தங்கமா! கேட்கும்போதே பயமாயிருக்கே, ஜாக்கிரதையா வச்சுக்கோங்கோ.

சிவ: இதை வாங்கத்தான் நான் பம்பாய் வந்தேன். இந்த விஷயத்தை ரகசியமா வச்சுக்கோ.

லீலா: பயப்படாதீர்கள்! எங்கிட்டே யிருந்து யார்கிட்டேயும் போகாது.

லீலா: அதோ உங்க தங்கம். இதோ உங்க பூமாலை. இது என் 'பேக்' (பையைக் காண்பிக்கிருள்) உங்க சாமானெல்லாம் உங்ககிட்ட ஒப்படைச்சுட்டேன்.

சிவ: ஆமாம்! இந்த பூமாலையை எதுக்காகக் கொண்டு வந்தாய்?

லீலா: எதற்காகச் சொல்லட்டுமா? (கையில் மாலையை எடுத்து சிவராம் கழுத்தில் போடுகிருள்)

சிவ: ஹா! லீலா!...

தேனில் ஈ விழுந்து விடுகிறது! சிவராமுடன் இரவில் அவன் அறையிலேயே தங்குகிருள் லீலா. தங்கம் வைத்திருக்கும் அலமாரியை நன்ருகக் கவனித்த லீலா இரவில் அதை எடுத்துக் கொண்டு தன் கோஷ்டியோடு இரவோடிரவாக வெளியேறி விடுகிருள். காலையில் எழுந்ததும் அலமாரியை ஆவலோடு பார்க்கச் சென்ற சிவராம், அங்கே தங்கத்தை காணுமல் கலங்குகிருன். லீலாவின் அறைக்கு ஓடுகிருன். ஆனல் அவள் அறை பூட்டப்பட்டிருக்கிறது. லீலா, காலிசெய்து விட்டுப்போன விஷயத்தை அந்த ஓட்டல் ஸர்வர் மூலம் அறிந்து, முதல் நாள் டான்ஸ் நடந்த ஹரீஷ் வீட்டுக்கு லீலாவைக் காண ஓடுகிருன்.

ஹரீஷ் வீட்டில் லீலா, மற்றெல்லோரும் தங்கள் திட்டம் நிறைவேறியதை நினைத்து மகிழ்ச்சியுடனிருக்கிருர்கள். அப்போது சிவராம் வருகிருன் லீலா சிவராமை அறியாதவள் போல் நடிக்கிருள்.

சிவ: லீலா...லீலா......(கையைப் பிடித்துக் கெஞ்சுகிருன்)

லீலா: சீ...விடு கையை! யார் நீ?

சிவ: ஹா! நான் யாரா? நான் யாரென்று உனக்குத் தெரியவில்லையா லீலா? தெரியா விட்டால் போகிறது! என்

தங்கக் கட்டிகளைக் கொடுத்துவிடு. அவை என்னிடமிருப்பது உன்னைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது. அவற்றை உன்னைத் தவிர வேறும் யாரும் எடுக்கவில்லை.

லீலா: சீ! என்ன உளறுகிறாய்?

சிவ: தங்கம் போனால் என்மானம் போய் விடும்! மானமழிந்தால் நான் அழிந்தே போவேன்!......என் குடும்பம் அழிந்து போகும். லீலா! இதோ என்னைப் பார்! நான் உனக்கு என்ன கெடுதல் செய்தேன்? நீயும் ஒரு பெண் அல்லவா? எனக்காக இரங்காவிட்டாலும் என் மனைவிக்காக, என் குழந்தை குட்டிகளுக்காக இரங்கு லீலா. உன்னைக் கெஞ்சுகிறேன்! தயவு காட்டு லீலா! (அவள் காலில் விழுகிறான்.)

லீலா: சீ, திருட்டு நாயே! தங்கமாம் தங்கம்! போ, வெளியே! போகிறாயா இல்லை......

சிவ: அடி சதிகாரி! ஈவிரக்க மில்லாத பேயே! உன்னையும் உன்னைச் சேர்ந்த இந்தக் கொள்ளைக் கூட்டத்தையும் என்ன செய்கிறேன் பார்!

('போன்' அருகில் சென்று போலீஸுக்குப் போன் செய்கிறான். அதைக் கண்டு ஆத்திர மடைந்த ஹரீஷ் அவனைத் தடுத்து, அவனை இரும்பால் தாக்குகிறான். அடி தாங்காமல் மூர்ச்சையாகிறார் சிவராம். மூர்ச்சையடைந்த சிவராமைத் தூக்கிக் கொண்டு ஹரீஷின் நண்பர்கள் ரயில்வே லயினுக்கு அருகே கொண்டு போய் லயனில் கிடத்தி விட்டு ஓடுகிறார்கள். அவர்களில் ஜம்புடுப்ஸிங் என்ற நண்பனுக்கு திடீரென்று ஒரு யோசனை வரவே, லயனின் மீது கிடத்தப்பட்ட சிவராம் அருகே சென்று, அவனிடமிருந்த தங்க கடிகாரம் முதலிய விலையுயர்ந்த பொருள்களைக் கைப்பற்றுகிறான். இதற்குள் மூர்ச்சை தெளிந்த சிவராம் ஜம்புடுப் சிங்கைத் தாக்கவே இருவருக்கும் சண்டை மூளுகிறது. இதற்கிடையில் ரயில் வருகிறது. லயனருகில் கிடந்த ஜம்புடுப் சிங்கை அது மோதிக் கொன்று விடுகிறது.)

காட்சி 16

(ரயில்வே லயனில் கிடைத்த சிவராமின் உடமைகளைக் கொண்டு, இறந்தது அவன்தான் என்று தீர்மானித்த போலீஸார் சாரதாவுக்கு விஷயம் தெரிவிக்கிறார்கள். கணவனை எதிர்பார்த்து கவலையோடு காத்துக் கிடந்த சாரதா இந்த மரணச் செய்தி கேட்டுத் துடி துடித்துப் போகிறாள். கணவனையே உலகமாகக் கண்ட அந்தக் கற்புக் கரசியின் கவலையைத் தீர்க்க யாரால் முடியும்?

(சுந்தரம் செட்டியார் உத்தமர். சிவராமின் மரணம் கண்டு, தன் பொருள் போனதற்காக கூடக் கவலைப் படாமல, சாரதாவைத் தேற்ற ஓடி வருகிறார்.)

சுந்: உங்களுக்கு என்ன ஆறுதல் சொல்றதுனு எனக்குப் புரியலையம்மா! இந்த நஷ்டம் உங்களுக்கு மாத் திரமல்ல! அவர் போனது என் வலது கையே உடைஞ்சு போனமாதிரி யிருக்கு. போனவரைத் திருப்பிக் கொண்டு வர முடியாது. ஆனால் அவர் என் வியாபாரத்தைக் கருத் தோட கவனிச்ச மாதிரி நான் இந்தக் குடும்பத்தைக் கவ னிச்சுக்கறேன். கடன். உடன் இருக்கேனு கவலைப்படா தீங்க! மாசா மாசம் குடும்பம் நடத்தறதுக்கும் குழந்தை கள் படிக்கிறதுக்கும் பணத்தாலே ஒத்தாசை பண்ண றேன். நான் வேற என்ன செய்ய முடியும்? உங்க புருஷன் கடமைக்காக உயிரைத் தியாகம் பண்ணியிருக்காரு. இது உலகத்திலே ரொம்ப அபூர்வம் அம்மா! நீங்க அதை நினைச்சுப் பெருமைப் படணும்! இவ்வளவுதான் நான் சொல்லலாம்.

காட்சி 17

பம்பாயிலிருந்து பைத்தியம் பிடித்த நிலையில் சிவ ராம் ஊருக்குத் திரும்பும்போது ரயிலில் பேப்பர் படிக்கும் சில பிரயாணிகள் மூலம் தான் மரணமடைந்ததாக செய்தி உலவுவதை யறிகிறான். அவன் மனம் துடிக்கிறது, ஆனால் பொன்னையிழந்து ஊருக்குத் திரும்பி தன் குடும்பத்திற் குப் பலவிதக் கஷ்டங்களையும் கொடுக்க விரும்பாமல் மறைந்து வாழத் தீர்மானிக்கிறான். மனச்சாட்சியின் கட்ட ளைக் கிணங்கி, பல இடங்களிலும் அலைந்து திரிந்து, திருச்சி வந்து சேருகிறான். வெறிபிடித்த மாதிரி நிற்கும்

அவனை சேரி மக்கள் அன்புடன் உபசரித்து ஆதரிக்கிறார்கள். ஒரு குழந்தை அவனைப் பார்க்கிறது. தாயாரிடம் சிபார்சு செய்கிறது.

குழ: அம்மா! அங்கே பாரு!

தாய்: யாரோ பாவம், நம்மைப் போல ஒரு ஏழை! இந்தாப்பா நீயும் ஒரு பிடி வாங்கிக்க, வா!

சிவராம் மௌனம் சாதிக்கிறான். கிழவி வருகிறாள்.

கிழ: ஏண்டி, மாரியாத்தா! யார்ரீ அங்கே?

தாய்: யாரோ பாவம் பேசாமெ வெறிபிடிச்சவன் மாதிரி நிக்கிறான். கண்லெ தண்ணீகூட தெளும்புது.

கிழ: ஐயோ பாவம்! டே. நல்லான்!...யாரப்பா நீ? எதுக்காவ இப்படி அளுவறே? கஷ்டங்கறது ஏழைங்களுக்கு கூடப்பிறந்த தம்பியாச்சே. அதுக்காக நாம்ப அளுதா கட்டுப்படி யாவுமா?

சிவ: நான் சாகவில்லை!

கிழ: அதுக்கா வருத்தப்பட்றே? பயித்தியக்காரா! நம்மைப் போல ஏழைங்களுக்கு சாவுன்று ஒண்ணு தனியா ஏதுப்பா? இருக்கிற இருப்பே, தினம் செத்துப் பொழைக்கிற இருப்பாச்சே! ஏழைங்க அவ்வளவு சுலபமா செத்துட்டா பெரிய மனுஷங்க் சுகப்பட்றதுக்கு யாரப்பா ஒழைப்பாங்க?

தாய்: அது கெடக்கட்டும். உனக்கு பெண்ஜாதி பிள்ளை, கொழந்த குட்டிங்க யாராச்சும் இருக்காங்களா?

சிவ: எனக்குப் பெண்டாட்டி பிள்ளை? ஓ...இருக்காங்க...உம்... இல்லை...இல்லை...கிடையாது கிடையாது!

கிழ: பாவம், எல்லாத்தையும் இழந்துட்டிருப்பான். யாரும் திக்கில்லை போலிருக்கு.

நல்: ஏழைக்கு திக்கு ஏழைதான். இல்லே எமலோகம். அம்மா! இவனெ பாத்தா பாவமா இருக்கு. இவனெ நம்ம சேரியிலேயே வச்சுக்கலாம்மா?

கிழ: வாப்பா! சாமி புண்ணியத்துலே என் குடிசையிலே என் மகன், மக, மருமகள், பேரன், பேத்தி எல்லாம் நெறைய இருக்காங்க. நீயும் அவங்களோடெ எம்பிள்ளை மாதிரி இருக்கலாம். வாப்பா!

குழ: வா தாத்தா! வா தாத்தா!!

கிழவியின் வீடு செல்கிருன் சிவராம்.

கிழ: டே மாணிக்கம், அப்பா, மருதை! வாங்கடா! இவுங்கல்லாம் என் மகனுங்க. இவங்க குளந்தைங்க. இதுங்க கும்மாளத்தைப் பாத்துகிட்டு காலத்தைத் தள்ளிக்கிட்டிருக்கேன். குளந்தைக சந்தோசமா விளையாடிக்கிட்டிருந்தா அதைவிட வேறென்ன சுகம் தம்பி?

நல்: தாத்தா சோறு துண்ணட்டும். நீங்கள்ளாம் போய் விளையாடிட்டு வாங்கடா.

கிழ: இந்தாப்பா கொஞ்சம் சோறு துண்ணு.

தாய்: அத்தான்! முனிசிபாலிடிலே சொல்லி இவனுக்கும் ஒரு வேலை பாரேன். ஒத்தக் :கட்டெ. நம்மோடெ இருந் துட்டுப் போருன்.

நல்: பாவம் எதுக்கெடுத்தாலும் அளுவரான் என்ன பாடோ என்னமோ!

காட்சி 18

சுந்தரம் செட்டியார் சாரதாவின் குடும்பத்திற்குக் கொடுத்து வந்த பென்ஷன் தொகையை பாங்கின் தற்போதைய மானேஜராகி விட்ட தனபால் நிறுத்தி விடுகிருன். படுக்கையிலிருக்கும் செட்டியார் அதைப்பற்றி அவனிடம் கேட்கும் போது சிக்கனத்தை முன்னிட்டு வீண் செலவுகளை குறைத்து விட்டதாக சால்ஜாப்பு சொல்கிருன்.

பென்ஷனும் நின்று வேறு வருவாயு மில்லாத நிலையிலே கடன் தொல்லை பொறுக்க முடியாத சாரதா செட்டியாரைப் பார்க்க வருகிருள். ஆனல் தனபால் அவளை தடுத்து விடுகிருன். அவளுடைய வீடு ஏலத்துக்கு வருகிறது உமாபதியின் சூழ்ச்சியால் லீலாவின் பெயரில் அவள் வீட்டை தனபால் வாங்கி விடுகிருன். வீட்டையிழந்த சாரதா குழந்தைகளுடன் குடிசையில் குடியேறுகிருள். உலக மறியாத அந்தக் குழந்தைகளின் பேச்சு சாரதாவின் உடைந்த உள்ளத்தில் உணர்ச்சிகளைக் கிளறி விடுகிறது.

லக்ஷ்: நாம் ஏம்பா இங்கே வந்திருக்கோம்? திரும்பி நம்ப வீட்டுக்குப் போக வேண்டாம்?

கோபி: அது இப்போ நம்ம வீடில்லே லக்ஷ்மி. நம்ம சாமானெல்லாம் புடுங்கிண்டாம் பாரு அந்த நொண்டி, அவன் நம்ம வீட்டையும் புடுங்கிண்டுட்டான், இனிமே நமக்கு இது தான், வீடு இல்லேம்மா?

சாரதா கண்ணீர் விடுகிருள்.

ஹரி: பார்ரு கோபி! அமமா அழரு?

கோபி: நம்ம வீடு போயிடுச்சேன்னு அழறியாம்மா? அழாதேம்மா, நான் பெரியவனுயி நெறைய பணம் சம்பாதிச்சு இன்னும் பெரிய வீடா வாங்கறேம்மா!

சாரதா: (அவனே அணைத்துக் கொண்டு) நீங்கள் எல்லாம் ஆயுசுடன் பிழைத்துக்கிடந்தால் அதுவே எனக்குப் போதும்.

காட்சி 19

ஒரு நாள் அந்தக் குடிசைக்கு பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் வருகிறுர். சாரதா அப்பொழுது வீட்டிலில்லே. குழந்தைகள் அவரை வரவேற்கிறுர்கள்.

லக்ஷ்: கோபி-ஹரி! அதோ பார் நம்ம ஹெட்மாஸ்டர் வரார்டா!

கோபி: ஸார்...ஸார்...ஸார் வாங்க ஸார்.

ஹெட்: உங்கம்மா எங்கே கோபி?

கோபி: வேலேக்குப் போயிருக்கா. இப்போவந்துடுவா. உள்ளே வந்து உட்காருங்க்.

ஹரி: அதோ! அம்மா வந்தாச்சு ஸார்.

சாரதா வந்து கொண்டே ஹெட்மாஸ்டரை வரவேற்கிருள்.

ஹெட்: உங்களெப் போல நல்ல மனுஷ்யாளுக்கு இந்தக்கதி வரப்படாது. என்ன செய்யறது? எல்லாம் அவன் விதித்த விதி. இப்போ நான் ஒரு காரியமா உங்ககிட்டே வந்திருக்கேன். அதனுலே ஒங்களுக்குக் கொஞ்சம் சௌகரியம் ஏற்படும்மா!

சார: உங்களெப்போல பெரியவா ஆசீர்வாதம்......

ஹெட்: நம்ம பள்ளிக்கூட டிரஸ்டுபோர்டு பள்ளிக்கூடத்திலே கர்நாடக சங்கீதம் சொல்லிக் கொடுக்கிறதுக்காக அஞ்சு ஸ்காலர்ஷிப் ஏற்படுத்தி யிருக்கா. அந்த உத்திரவைப் பார்த்தவுடனே எனக்கு இந்தக் குழந்தைகள் ஞாபகம்தான் வந்தது. உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா இந்த மூணு குழந்தைகளுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்க ஏற்பாடு பண்றேன். இவர்கள் சங்கீதம் உங்கள் கஷ்டத்தைக் கொஞ்சம் குறைக்கும் அம்மா.

சார: இவர்கள் அப்பா கண்ட கனவு.

ஹெட்: அது இனிமே கனவு இல்லேம்மா! குழந்தைகளை நாளையே பிடிச்சு அனுப்பிடுங்கோ! மத்ததையெல்லாம் நான் பார்த்துக்கறேன்.

சார: எங்கள் கஷ்ட காலத்திலே தெய்வம் மாதிரி வந்திருக்கிறீர்கள்.

ஹெட்: கவலைப்படாதீங்கம்மா. தெய்வம் உங்களுக்கு ஒரு குறைச்சலும் வைக்காது.

வருஷங்கள் ஓடுகின்றன, சங்கீதப் பயிற்சியில் ஈடுபட்ட குழந்தைகள் பெரியவர்களாகிறார்கள். அவர்களது திறமையை உலகறியச் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்ட ஹெட்மாஸ்டர் அவர்களது கச்சேரி அரங்கேற்றத்துக்காக சபா செக்ரட்ரியுடன் வந்து சேருகிறார். அறிமுகம் ஆரம்பமாகிறது.

ஹெட்: இவன்தான் பெரிய பையன் 'கோபால்,இவன் இரண்டாவது பையன் ஹரி இவள்தான் தங்கை லக்ஷ்மி.

ஹெட்: இவர் பார்த்தசாரதி ஸ்வாமி சபையின் பிரசிடெண்டு. உங்கள் முதல் கச்சேரியை இவர்கள் சபையிலே வைக்கணும்னு கேக்க வந்திருக்கிறார்.

காட்சி 20

லக்ஷ்மி-கோபி-ஹரியின் புகழ் பரவுகிறது. அவர்களுடைய கச்சேரி அநேகமாக எல்லா ஊர் சபைகளிலும் நடைபெறுகிறது. அவர்கள் வருவாயில் குடிசை அழகான வீடாகிறது. செல்வம்கொழிக்கிறது அவ் வீட்டிலே. ஆனால் தன் வீட்டை யிழந்த சாரதாவுக்கு மட்டும் மனதிலே தெம்பில்லே. இதையறிந்த கோபி செக் புத்தகத்துடன், என்ன விலையா

ஜூலும் வீட்டை மீட்டு விடுவது என்ற தீர்மானத்துடன் தனபாலிடம் வருகிருன். அப்போது குமரர் தனபாலுடன் பேசிக்கொண் டிருக்கிருன். அவர்களிருவருக்கும் லக்ஷ்மியின் மீது ஒருகண்.

குமா: இந்த லக்ஷ்மி மாத்திரம் நம்ம படத்துக்குப் பின்னணி சங்கீதம் பாடிஞ படம் பிரமாதமா ஓடும். வெள்ளி விழா, தங்க விழா, வைர விழான்னு ஒரே விழாவா அடிச்சு தள்ளலாம்.

தன: அவ்வளவு அழகாவா பாடரு?

சீதா: அதென்ன அப்படி கேக்கறீங்க? அந்தம்மா பாட்டுன்ஞ—ஜனங்களுக்கு ஒரே பயித்தியமில்லே?

தன: அட! பாட்டை எவன் கேட்டான். பொண்ணு பார்வைக்கு கூட அழகாத்தான் இருக்கா? இல்லே?

பத்திரிகையில் வந்த லக்ஷ்மியின் படத்தை லீலாவிடம் காட்டும்போது அவள் வாங்கி வீசி எறிகிருள்.

லீலா: உனக்கு வேண்டியது அதுதானே!

தன: என்ன லீலா, மறுபடியும் சண்டைக்கு ஆரம் பிக்கிருய்?

குமா: சினிமாவுக்கு லக்ஷ்மி புதுசு. மொதல்லே அவளெ நம்ம கம்பெனியிலே சேத்துட்டோம்.

லீலா: அவ உருப்பட்ட மாதிரிதான்!

தன: லீலா...!

லீலா: இந்த உருட்டலே யெல்லாம் புது முகம் ஒண்ணு வருது பார். அதுங்கிட்டே காட்டு. ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள். அதற்கப்புறம் இந்த புதுமுகமும் பழைய முகம்தான்.

லீலா கோபத்துடன் போய் விடுகிருள்.

உமா: எஜமான் அவரே வந்துட்டாருங்க.

தன: யாரரா அது?

உமா: அதுதாங்க, சிவராம் பெரியபிள்ளை கோபால்.

தன: குமார்! உன் மாமன் பெருமையைப் பார்த்தர்யா? லக்ஷ்மியெ செட்டில் பண்ண நெனேச்சேன். அவ அண்ணனே தலேயெ நீட்டருன்.

கோபி உள்ளே வருகிருன்.

கோபி: நமஸ்காரம்!

தன: வாப்பா, உட்கார்! உன்னெ ரொம்ப சிறுவய சிலே பார்த்தது. அதுக்கப்பறம் பாக்கவே இல்லே. உங் கம்மா, தம்பி, தங்கை யெல்லாம் சௌக்கியம்தானே?

கோபி: உங்க தயவிலே சௌக்கியந்தான்.

தன: என் தயவென்னப்பா! உங்கள் புகழ்தான் உலக மெல்லாம் பரவிக்கிடக்குதே, எனக்கு அதிலே எவ்வளவு சந்தோஷம் தெரியமா? நம்ம குமாரரை உனக்குத் தெரியு மில்லே.

கோபி: சின்ன வயசிலே பார்த்தது.

தன: இப்ப நம்ம பில்ம் கம்பெனியிலே ஜூனியர் புரொப்ரைட்டர். குமார்! இவர்தான் லக்ஷ்மியின் பெரிய அண்ணன் கோபால்.

ஒருவருக் கொருவர் அறிமுக மாகின்றனர்.

தன: ஏதோ வேலையா வந்திரிக்காப் போலிருக்கு.

கோபா: ஆமாம்! நீங்கள் ஏலத்தில் எடுத்த எங்க வீட் டைத் திருப்பி வாங்க உத்தேசம். எங்க தகப்பனுர் கட்டி வெச்ச வீடு, அதுமேலே எங்கம்மாவுக்கு உயிர்.

குமா: கொஞ்சம் கவனியுங்க மாமா.

தன: பெரியவங்க சொத்து. விட மனசு இருக்காது தான். ஆனு அந்த வீடு என்பேர்லே இல்லியே? லீலா பேர் லல்லே இருக்கு. அவ கொடுப்பாளோ மாட்டாளோ?

கோபி: விலேக்காகப் பாக்க வேண்டாம். அஞ்சு பத்து மேலே போனலும் பாதகமில்லே.

குமா: மாமா! நீங்க சொன்னு! அவ கேப்பா மாமா!

தன: கேப்பா! ஆனு அந்த வீடு வாங்கினதிலேருந்து அவளுக்கு அதிர்ஷ்டம். தவிர அவளுக்கு ஒரு சமயம் இருக்கிற புத்தி இன்னெரு சமயம் இருக்காது! உம். எதுக் கும் கேட்டுப் பாக்கறேன். நான் பேசிகிட்டு வர்றதுக் குள்ளே குமார் தம்பியெ காபி பலகாரம் வாங்கி கொடுத்து ஆபீஸே அப்படியே ஒருதரம் சுத்திக் காட்டு.

லீலாவிடம் தனபால் சென்று தாஜா செய்கிருன்.

தன: லீலா, லீலா! கதவைத் திற. ஒரு நல்ல சமாசாரம்.

லீலா: ஒரு சமாசாரமும் வேண்டாம்.

தன: பிடிவாதம் செய்யாதே! திற கதவை. ரொம்ப முக்கியமான விஷயம்.

லீலா: அப்பப்பா! என்ன வந்து விட்டது?

தன: சொல்றேன். லக்ஷ்மி வந்து விட்டாள் உன் வாசலுக்கு.

லீலா: லக்ஷ்மியா! எந்த லக்ஷ்மி?

தன: அட, மனுஷ்ய லக்ஷ்மியில்லே. பணம்! பணத்தைச் சொல்றேன். நிதானமாகக் கேள். சிவராமின் மூத்த மகன் கோபால் உன் வீட்டைத் திருப்பி வாங்க வந்திருக்கிறான். என்ன விலேயானாலும் சரி. திருப்பி வாங்கிக்குவான் இந்த டிரான்ஸாக்ஷன்லே பத்தாயிரம் பதினையாயிரம் 'ஈஸி'யா லாப மடிக்கலாம்!

லீலா: உம் பத்தாயிரத்தைக் கொண்டு போய்க் கிணற்றில் போடு. என் வீட்டைப் பிடுங்கிக்க இது ஒரு சூழ்ச்சியா? அந்த லக்ஷ்மியை உன் வசமாக்க இந்த சின்ன மீனைத் தூண்டிலே கட்டி நீட்டப் பார்க்கிறாயா. அது இங்கே நடக்காது.

தன: அட நீ ஒண்ணு யோசனை பண்ணிச் சொல்லு. நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடாதே. லக்ஷ்மியின்மேல் பைத்தியமா யிருப்பது நானல்ல. குமார்தான். அஜந்தா சித்திரத்தைப் பார்த்த என் கண்கள் நியூஸ் பேப்பர் கார்டூனைக் கண்டு களிக்குமா?

லீலா: போதும், போதும்! இதை யெல்லாம் கேட்டுக் காது புளித்து விட்டது எனக்கு.

தன: எல்லாம் உன் நன்மைக்காகத்தான் சொல்றேன். பிலிம் கம்பெனி தனபாலுடையது! ஆனால் தனபால் உன்னுடைய அடிமை. ஆனால் இந்த வீட்டை விற்றால் குறைந்த பக்ஷம் 15000 அதிகமாகக் கிடைக்கும். இன்னும் பெரிய பங்களா வாங்கி அதில் என் ராணியைப் பிரதிஷ்டை செய்வேன். பிரதிஷ்டை செய்வேன்.

லீலா: பசப்பு வார்த்தை!

தன: ஆனால் கசப்பு வார்த்தையில்லே. பணம் அதிகமாகக் கிடைக்கிறது. உம்...னு சொல்லு! ஹ ஹ்ஹா! சிரியோ!

தனபால் கோபாலிடம் வருகிறான்.

தன: கோபால்! உங்களுக்கு அதிர்ஷ்டம்தான். ரொம்ப சிரமப்பட்டு லீலாவைச் சம்மதிக்க வச்சேன். ஆறு வாங்கின வெலேக்கு மேலே இருபதாயிரம் கேக்கரு? கொடுக்கும்படியா......

கோபா: எங்களுக்கு வீடு முக்கியமே தவிர, விலே முக்கியமில்லே. இப்பவே செக் தரேன்.

தன: அப்ப...உங்க வீட்டெ நாளேக்கே உங்களிடம் ஒப்படைச்சுட்றேன். பத்திரம் ரிஜீஸ்டர் பண்ணி பிற்பாடு அனுப்பறேன்.

கோபா; நீங்க செய்த இந்த உபகாரத்தை நாங்கள் மறக்கவே மாட்டோம்.

தன: அட. நான் என்ன உபகாரத்தைச் செஞ்சிட்டேன். ஒண்ணுமில்லே! உங்கப்பா எனக்குச் செய்திருக்கிற உதவிக்கு நான் என்ன செய்தாலும் தகும். உங்கப்பா இந்த தனபால்ஞ உயிரையே விட்டுடுவார். இன்னிக்கிக் கூட அவரை மறக்க முடிகிறதா? இப்ப நான் இவ்வளவு பெரிய ஸ்திதிலே இருக்கிறதுக்குக் காரணமே அவர் தானே? எப்பேர்ப்பட்ட மனுஷன்! என்ன குணம்!! போயிட்டார்! ஊம் கோபால்! மறந்தே போயிட்டேன். எங்களுக்குப் பின்னணி சங்கீதத்திற்குப் பெண் குரல் தேவை. உங்க சகோதரியெ நீங்க பாட அனுமதிச்சா ரொம்ப நல்லாருக்கும். என்னடா இப்படிக் கேக்கிருனேன்னு வித்தியாசமா நினேக்காதிங்க!

கோபா: இதுக்கு எங்க தாயாரெத்தான் கேக்கணும்.

தன: அப்ப குமார்! நீ வீட்டுப்பத்திரம் கொண்டு போகும்போது இதப்பத்தியும் கேட்டுட்டு வந்திடு.....மறந்துடாதே.

கோபா: நான் வரட்டுமா?

விடை பெற்றுச் செல்கிறான்.

காட்சி 21

சிவராம் கட்டிவைத்த வீடு அவன் குடும்பத்தின் வசம் வந்துவிடுகிறது. சாரதா, கோபி, ஹரி, லக்ஷ்மி யாவரும் வீட்டை அலங்கரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர். அப்போது திருச்சியிலிருந்து ஒரு கச்சேரிக்கு அழைப்புத் தந்தி வருகிறது. மூவரும் பிரயாணத்துக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றனர். திருச்சியிலே தெருக் கூட்டிக் கொண்டிருந்த சிவராமின் கண்களில் ஒரு கச்சேரி நோட்டீஸ் எதேச்சையாகத் தென்படுகிறது. தன் பெயரையும், தன் மக்கள் மூவர் பெயரையும் கண்ட சிவராம் நோட்டீஸைக்கூர்ந்து கவனிக்கிறான். அவன் மனதில் ஆவல் மூளுகிறது. லக்ஷ்மியின் பாட்டுக் கச்சேரி நடந்து கொண்டிருக்கிறது. ஹாலிலே நிறைந்திருந்த ஜனத்திரள் செவிக்கினிய கானாம்ருதத்தில் மூழ்கித் திளைத்துக்கொண்டிருந்தனர். அப்போது சிவாாம் ஆவலுடன் நுழைகிறான். 'கேட் கீப்பர்' தடுக்கவே, அவன் கையில் கொஞ்சம் பணத்தைத் திணிக்கிறான். உள்ளே அனுமதிக்கப்படுகிறான். மிக்க ஆதங்கத்துடன் மேடையை நெருங்குகிறான். ஜனங்களின் கரகோஷம் வானைப் பிளக்கிறது.

வெகு நாட்களுக்குப் பிறகு தன் மக்களை நேரில் கண்ட சிவராமின் மனம் சொல்லொணு ஆனந்த மடைகிறது.

கோபி: (எழுந்திருந்து) இப்பொழுது நாங்கள் கடைசியாகப் பாடப்போகும் பாட்டு நாங்கள் சிறுவர்களாக இருந்தபோது காலமான எங்கள் அருமைத் தகப்பனர் சொல்லி வைத்தது. அவருக்கு மிகவும் பிடித்தமான இந்த பாட்டை அவர் ஞாபகார்த்தமாக் ஒவ்வொரு கச்சேரியிலும் பாடுகிறோம்.

'கொஞ்சுமொழி மைந்தர்களே தவள வானில்' என்ற பாட்டைப் பாடுகின்றனர். கேட்டுக் கொண்டிருந்த சிவராமின் மனதில் சென்ற காலத்தின் நினைவு அலைகள் மோதுகின்றன. அவர் மனம் பரவசமடைகிறது. திடீரென்று பாட்டின் போக்கு மாறுகிறது. 'நெறிதவறி நீ வீழ்ந்ததால் பாழடைந்தது உன் வாழ்நாள்!' என்ற அடிகள் சிவராமைத் துயரத்தில் ஆழ்த்துகிறது. துக்கம் தாளாமல் சிவராம் விக்கி அழுகிறான்.

(பாட்டு முடிகிறது. ஹரி பேசுவதை சிவராம் கவனிக்கிறன்.)

ஹரி: ஒரு விண்ணப்பம்! நேற்று நாங்கள் ஊரி லிருந்து புறப்படும்போது எங்கள் தாயாருக்கு உடம்பு சௌகர்யமில்லை. ஆகவே நாளை மலைக் கோட்டையில் நடக்க வேண்டிய கச்சேரியை அடுத்த ஞாயிற்றுக்கிழமை வரை ஒத்திப்போட வேண்டி யிருக்கிறது. சபையோர் மன்னிக்க வேண்டும்.

ஏற்கனவே துக்கம் தாளாமல் தவித்துக் கொண் டிருந்த சிவராமை இந்தச் செய்தி மேலும் கொல்லுகிறது. கச்சேரி முடிகிறது. எல்லோரும் எழுந்து செல்கிருர்கள். காலியான ஹாலில் தனியே நின்று கொண்டிருந்த சிவராம் காவற்காரனல் விரட்டப்படுகிருன்.

சாரதா உடம்பு அசௌகர்யமா யிருக்கிருள். குமார் வீட்டுப் பத்திரத்தை கொடுக்க வருகிருன் பத்திரத்தைக் கொடுத்துவிட்டு லட்சுமியை பின்னணி சங்கீதம் பாட அனுமதிக்க வேண்டுமென்று சாரதாவைக் கேட்டுக் கொள்கிருன். அதுசமயம் திருச்சி சென்றிருந்த கோபி, ஹரி, லக்ஷ்மி மூவரும் திரும்புகின்றனர். கோபி குமாரை ஹரி, லக்ஷ்மி இருவருக்கும் அறிமுகப் படுத்தி வைக்கிருன். லக்ஷ்மி பின்னணி சங்கீதம் பாடுவதற்கு சாரதா சம்மதிக் கிருள். மூவரையும் பிலிம் கம்பெனிக்கு வரும்படி அழைத்து விட்டு குமார் செல்கிருன்.

காட்சி 17

பிலிம் கம்பெனி. தனபால் தனிமையில் ஒரு பெண்ணை ஆசைவார்த்தை காட்டி தன் வலையில் சிக்க வைக்க முயற்சித்துக் கொண்டிருக்கிருன். அதைக் கேட்டுக் கொண்டிருந்த லீலா கோபத்துடன் நுழைகிருள்.

லீலா: இவளையும் கதாநாயகியாக்கப் போகிருயா? உன் கதாநாயகி ஜாபிதா நீண்டுகொண்டே போகிறது தனபால். இன்னும் எவ்வளவு பேரை இந்த மாதிரி ஆசை காட்டி மோசம் செய்ய திட்டமிட்டிருக்கிருய்? (அந்தப் பெண்ணைப் பார்த்து) இந்தாம்மா! இந்தப் பெரிய மனுஷன் வார்த்தையைக் கேட்டு முன்னுக்கு வந்த ஆசாமி யாரும் கிடையாது! நீயாவது ஜாக்கிரதையாகப் பிழைத்துப் போ.

(அந்தப் பெண் வெளியே செல்கிருள்.)

தன: லீலா! இதெல்லாம் என்ன?

லீலா: என்னவா. நீ செய்த மோசத்துக்கு கைமாறு!

தன: உன்னை நான் என்ன மோசம் செய்தேன்?

லீலா: என்னவா? லீலா—தனபால் பிலிம் கம்பெனி தனபால் பிலிம் கம்பெனியாயிற்று. வாங்கின வீட்டை திருப்பி அவர்களுக்கு விற்று அதிலும் கமிஷன் அடித்தாய். பணம் எங்கே யென்றால் பெரிய பங்களா கட்டித் தருகிறேனென்று சொல்லிச் சொல்லி கடைசியில் கை விரித்து மங்களம் பாடினாய். இத்தனையும் போதாதென்று தினமொரு பெண்ணைக் கூட்டி வந்து சரசமாடப் பார்க்கிறாய். இனி இந்த லீலாவை ஏமாற்றலாமென்று கனவிலும் நினைக்காதே!

தன: உன் புராணம் முடிந்ததா?

லீலா: முடிந்து விட்டது. உன் புராணம்தான் பாக்கியிருக்கிறது. அதையும் முடிக்க என்னால் முடியும் ஜாக்கிரதை தனபால்! என் ஒரு வார்த்தை உன்னைக் கம்பியெண்ணச் செய்யும்.

தன: தனியாக எண்ணமாட்டேன் எனக்குக் கிடைப்பதில் உனக்கும் பங்கு உண்டடி என் கிளியே!

லீலா கோபத்துடன் வெளியேறுகிறாள். ஹரியும் லக்ஷ்மியும் வருகின்றனர். வழக்கப்படி அறிமுகம் நடைபெறுகிறது.

தன: நீங்கள் சினிமாவுக்குப் பாட முன்வந்தது எங்களுக்கு மட்டுமல்ல, இந்தத் தொழிலுக்கே அதிர்ஷ்டம் என்று சொல்ல வேண்டும். உங்களைப் போல் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சங்கீத ஞானஸ்தர்களும் சினிமாவில் ஏராளமாகச் சேர வேண்டும். அப்பொழுதுதான் மிக உன்னதமான இந்தக் கலைக்கு ஏதாவது விமோசன மேற்படும். இல்லாவிட்டால் இந்தக் கலை காலிகள் கையில் சிக்கிச் சீரழிந்து செத்துப் போகும். ஹ! என் லட்சியங்கள் மிக உன்னதமானவை அதெல்லாம் போகப் போக உங்களுக்கே தெரியும்.

ரிஹர்சல் ஹாலுக்கு ஹரியையும் லக்ஷ்மியையும் அழைத்துச் சென்று காட்டிவிட்டு இரவு எட்டு மணிக்கு மீண்டும் வரச் சொல்லுகிறான் தனபால். அவர்கள் இரவு வருவதாகக் கூறிச் செல்கிறார்கள்.

காட்சி 18

லக்ஷ்மியின் பிறந்த தின விழா அமோகமாகக் கொண்டாடப் படுகிறது. தன் குடும்ப வளத்தைக் கண்டு-முக்கியமாக லக்ஷ்மியின் பொன்னைக் கண்டு—மிகவும் சந்தோஷம் அடைகிருன் சிவராம். வீட்டுக்குள்ளே நுழைய விரும்பாது கண்ணுடி ஜன்னலின் வழியே பார்த்து ஆனந்திக்கும்போது அவனைக் கண்ட ஒரு போலீஸ்காரன் திருட வந்தவனென்று மிரட்டுகிருன்.

சிவ: சத்தம் போடாதீங்கய்யா, நான் திருடனில்லே. நான் போயிடறேன்.

போலீ: திருடனில்லே, பெரிய திவான் பகதூர்! எந்தத் திருடன்டா தன்னைத் திருடன்னு ஒப்புத்துக்கு வான்? ஒழுங்கான ஆளாயிருந்தா நேரே வீட்டுக்கு போகாமே ஜன்னலில் ஏன் நோட்டம் பாக்கணும்? ஏமாந்தா ஏதாவது அடிச்சுப் போகலாம்கற யோசனை தானே.

கோபி: என்னப்பா கான்ஸ்டபிள்! யாரங்கே?

போலீ: எவனே தெரியலே. ஜன்னலாலெ வீட்டுக் குள்ளே எட்டிப் பார்த்துக்கிட்டிருந்தான். சந்தேகமா இருந்தது புடிச்சு விசாரிச்சுக்கிட்டிருக்கேன்.

கோபி: யாரோ பாவம்! ஏழை. வயசானவஞ இருக்கான். பாத்தா திருடறவஞ தெரியலே. போகட்டும் விட்டுடப்பா.

போலி: சரி, உங்க இஷ்டம்.

கோபி: பாவம். ஒன்னெப்பாத்தா ரொம்ப களைச்சவன் மாதிரி இருக்கு. உள்ளே வாப்பா. ஏதாவது சாப்பிட்டுப் போகலாம். இன்னிக்கு என் தங்கையின் பிறந்த நாள். ஒன்னெப் போல பெரியவங்க வந்து ஆசீர்வாதம் பண்ணிஞ எங்கப்பாவே வந்த மாதிரி. எங்களுக்கெல்லாம் சந்தோஷ மாயிருக்கும்.

(சாரதாவும் லக்ஷ்மியும் வெளியில் வருகிருர்கள்.)

சார: என்னப்பா. கோபி, யாரொட பேசிண்டிருக்கே?

கோபி: யாரோ ஏழை. நாமெல்லாம் சந்தோஷமா யிருந்ததை ஜன்னலாலே பார்த்துண்டிருந்தாஞம்.

சார: ஐயோ பாவம்! உள்ளே கூப்பிடப்பா. ஏதாவது சாப்பிட்டுப் போகட்டும். உங்கப்பா இருந்தா இந்தமாதிரி ஒரு ஏழை வாசலிலே நிற்பதைச் சகிக்கவே மாட்டார். கூப்பிடப்பா உள்ளே.

(அப்போது ஹரியும் வாசலுக்கு வருகிறான்.)

ஹரி: அம்மா இந்த பனிக்காத்து உனக்கு உடம்புக்கு ஆகாது. உள்ளே போம்மா. லக்ஷ்மி! அம்மாவெ உள்ளே அழைச்சுக்கிட்டு போ.

லக்ஷ: வாம்மா!

(இருவரும் உள்ளே சென்று விடுகின்றனர்.)

கோபி: எங்கம்மாவே கூப்பிடரு பார். உள்ளே வாப்பா.

சிவ: இல்லெ, நான் போறேன்.

ஹரி: (சில்லறையை நீட்டி) அப்ப இதையாவது வாங்கிக்கோ.

(சிவராமன் வாங்காமல் மௌனமா யிருக்கிறான்.)

கோபி: வாங்கிக்கோ. எங்களுக்குத் திருப்தியா யிருக்கும். உனக்கு வீடு, வாசல், பெண்டாட்டி, பிள்ளை யாருமில்லையா?

சிவ: ஏன் இல்லே? எல்லோரும் இருக்கிறார்கள். கடமை தவறாத மனைவி. கண்மணிகளான குழந்தைகள். சந்தோஷமான குடும்பம் எனக்கு ஒரு விதமான குறைச்சலுமில்லே.

(சிவராமன் போய்விடுகிறான் சிறிது நேரத்தில் லக்ஷ்மியை ஏற்றிச் செல்ல படக் கம்பெனி வண்டி வருகிறது. அதிலிருந்து இறங்கி உள்ளே செல்லும் உமா பதியைக் கண்டு திடுக்கிடுகிறான் சிவராம். படக் கம்பெனி யின் பெயர் லீலா—தனபால் கம்பெனி என்றறிந்ததும் தன் குடும்பத்திற்கு நாசகாலம் வரப்போவதை யறிந்து, அந்தக் காரைத் தொடருகிறான்.)

காட்சி 19

(ஹரியும், லக்ஷ்மியும் வந்ததும் தனபால் சால்ஜாப்பு சொல்லி குமார், ஹரி இருவரையும் நெக்லேஸ் வாங்கி வர கடைக்கு அனுப்பி விடுகிறான். அவர்கள் சென்றதும் லக்ஷ்மியிடம் தன் வரிசையைக் காட்டுகிறான்.)

தன: உட்கார் லக்ஷ்மி! பாடிப் பாடி களைத்துப் போயிருப்பியே கொஞ்சம் 'ஆப்பிள் ஜூஸ்' கொண்டு வரச் சொல்லட்டுமா?

லக்ஷ: வேண்டாம்...

தன: இந்தக் காலத்துப் பெண்ணாயிருந்து இப்படி வெட்கப்படுகிறாயே. உன் சரீர அழகுக்கும், சாரீர இனிமைக்கும் நீ மட்டும் ஹாலிவுட்டில் பிறந்திருந்தால் லக்ஷக் கணக்கில் பணம் சம்பாத்தியம் பண்ணியிருக்கலாமே. என்ன செய்யலாம்? உன் தலைவிதி தமிழ் நாட்டிலே வந்து பிறந்துட்டே. (அவள் கையிலிருந்த புத்தகத்தை வாங்கியபடி) இதோ பார்! இவங்கள்ளாம் இந்தக் காலத்து ஸ்டார் ஸாங்க. உன் கால் தூசிக்கு இணையாக மாட்டார்கள். நீ சூரியன்; இவர்கள் மின்மினிகள்! நீ கான மயில்; இவங்கள்ளாம் சுத்த வான்கோழிகள். (அவளைத் தொடுகிறான்.)

லக்ஷ்: (பதட்டத்துடன்) ரிஹர்சல் ரூம்லே எல்லாரும் காத்திட்டிருப்பாங்க. நான் போறேன்.

தன: எங்கே போறீங்க. இருக்கட்டுமே! நீ இங்கேயே இரு நான் அவுங்களை அங்கயெ இருக்கச் சொல்லிட்டு வந்திடறேன்.

[ரிஹர்சல் ரூமிலிருந்தவர்களை வெளியே அனுப்பி விட்டு மீண்டும் லக்ஷ்மியிடம் வருகிறான் தனபால்.]

லக்ஷ்: என அண்ணன் இன்னும் வரல்லியா?

தன: என்ன அவசரம்? தானே வ்ரான் போயிருப்பதே உனக்காகத் தானே?

லக்ஷ்: நான் ரிஹர்சல் ரூமுக்குப் போறேன். எனக்கு என்னமோ பயமா இருக்கு.

தன: பயமா? இதற்கெல்லாம் பயந்தால் இந்தக் காலத்தில் முன்னேற முடியுமா? நான் சொல்றபடி நட! பணமும் புகழும் உன்னைத் தேடி. எங்கே எங்கே என்று ஓடிவரும். ஆனந்தத்திற்கு ஒரு அளவே இருக்காது. காடிலக் காரிலே கடற்கரை சவாரி; மாலை வேளையில் மஞ்சள் வெய்யிலில் கொஞ்சும் மொழிகள்!...

(லக்ஷ்மியை அணைக்கப் போகிறன் தனபால். லீலா வருகிறள். லக்ஷ்மி தனபாலிடமிருந்து தப்பித்துக் கொண்டு லீலாவிடம் அடைக்கலம் புகுந்து விடுகிறள்.)

லக்ஷ்: அம்மா! என்னைக் காப்பாத்துங்க! ஒங்களுக்கு ரொம்ப புண்ணியம் உண்டு.

லீலா: அடப்பாவி! இதற்காகவா என்னை வெளியி லனுப்பினாய்? உனக்கும் குட்டிச்சுவருக்கான மாதிரி வயசாயிற்றே. இன்னும் பழைய புத்தி போகவில்லையா?

தன: லீலா! உனக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் தலையிடாதே போ!

லீலா: ஆம். எனக்குச் சம்பந்தமில்லை. தனபால்! என்னை இன்னும் உன் இஷ்டப்படி விரட்டலாமென்று நினைக்காதே இவர்கள் குடும்பத்தை நாசம் செய்ததன்றி இவளையும் கொடுக்கப் பார்க்கிறாயா?

தன: நிறுத்தடி.

(லீலாவை அடிக்கிறான். அதற்குள் லக்ஷ்மி வெளிப் பக்கம் ஓடவே அவளைத் தொடருகிறான். இதற்குள் லீலா போலீசுக்குப் போன் செய்து விடுகிறாள். இதை ஓரளவு எதிர் பார்த்த சிவராம் லக்ஷ்மியின் அலறல் கேட்டு உள்ளே பாய்கிறான். தனபால் அவனைக் கீழே தள்ளி விடுகிறான். அவனை அடிக்க நாற்காலியை தனபால் தூக்கும்போது குமாரும், ஹரியும் உள்ளே வருகின்றனர். லக்ஷ்மி ஹரி யிடம் ஓடுகிறாள். போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜவான்களுடன் வந்து சேருகிறார்.

இன்: வாட் ஈஸ் தி மேடர். யார் போன் செய்தது?

லீலா: நான்தான் போன் செய்தேன் இவனை முதலில் அரெஸ்ட் செய்யுங்கள் பம்பாயில் ஹரீஷ் என்று இவனது சினேகிதன் ஒருவன் இருக்கிறான். அவனையும் அரெஸ்ட் செய்து கொண்டு வாருங்கள். ஒரு பெரிய சதியின் கதையை அம்பலப் படுத்துகிறேன்.

போலீசார் தனபாலையும் உமாபதியையும் இழுத்துச் செல்கின்றனர்.)

காட்சி 20

(கோர்ட்டில் வழக்கு விசாரணைக்கு வருகிறது. அப்ரூவராக மாறிய லீலா, பம்பாயில் தங்கம் கொள்ளை போனது, தனபால் தன்னை வஞ்சித்தது ஆகிய எல்லா விஷயத்தையும் கூறி விடுகிறாள்.)

மாஜி: முதல் எதிரி தனபால்! போலீஸ் சார்ஜ்ஷீட், லீலாவின் சாட்சியம் இரண்டையும் கேட்டாயல்லவா? அவற்றிகுற்கு என்ன சமாதானம் சொல்லுகிறாய்?

தன: அவைகளனைத்தும் கட்டுக் கதை. லீலா சொன்னதெல்லாம் நிஜக் கலப்பில்லாத சுத்தப் பொய்! என் மேலுள்ள விரோதத்தால் இல்லாத பொய்களை யெல்லாம் என் தலையில் சுமத்தப் பார்க்கிறாள்.

மாஜி: அவ்விதம் நிரூபிக்க சாட்சி யாராவது இருக்கிறார்களா?

தனபாலின் வக்கீல்: எஸ் யுவர் ஆனர்! சாட்சி ஜாபிதாவை தாக்கல் செய்திருக்கிறோம்!

மாஜி: சரி. இந்தச் சாட்சிகளுக்குச் சம்மன் அனுப்பு. (ஹரீஷையும் பார்த்து) இரண்டாவது எதிரி ஹரீஷ்! இந்த வழக்கைப் பற்றி நீ ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?

ஹரீ: லீலா இந்த தனபாலைப் பற்றிச் சொன்ன விஷயங்கள் அத்தனையும் உண்மை. ஆனால் சிவராமனைப் பற்றிச் சொன்ன தகவல்களில் மட்டும் ஒரு பெரிய தவறு இருக்கிறது. சிவராம் இறக்கவில்லை. உயிருடன் இருக்கிறான்.

மாஜி: என்ன?

[கோர்ட்டில் கூடியிருந்த யாவரும் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து விடுகிறார்கள். சிவராமின் மனம் துணுக்குறு கிறது. கோர்ட்டிலே கசமுச சப்தம் ஏற்படுகிறது.]

மாஜி: உண்மையாகவா?

ஹரீ: ஆம். சிவராம் உயிருடன்தான் இருக்கிறான். எனக்கு நிச்சயமாகத் தெரியும். சிவராம் என் வீட்டை அடையாளம் கண்டு பிடித்து தங்கத்தைக் கொடுத்து விடும்படி லீலாவிடம் கெஞ்சியபோது நான் தான் அவனை இரும்பால் தலையிலடித்து வீழ்த்தினேன். மூர்ச்சையா யிருந்த சிவராமை ரயில் தண்டவாளத்தில் போட்டு வரும்படி என் நண்பனை அனுப்பினேன். அங்கே என்ன நடந்ததோ தெரியாது! ஆனால் போன என் நண்பன் திரும்பவில்லை. சிவராம் எப்படியோ தப்பிக் கொண் டான். மாண்டவன் மானேஜர் சிவராமல்ல. என் தோழன் தான் என்பதை மறு நாள் சந்தேகமறத் தெரிந்து கொண் டேன். பணத்துக்காக ஆசைப்பட்டுப் பர்தகர்களுடன்

பழகினேன். அதன் பயனாக என் உயிர்த் தோழனை இழந்தேன். குற்றமற்ற சிவ்ராமின் குடும்பத்தை நாசம் செய்தேன். இவ்வனைத்துக்கும் மூல காரணம் இந்த அயோக்கியன் தனபால்தான்.

தனபால் ஹரீஷ் கூறியதை மறுத்து, சிவராம் தான் குற்றவாளி, கொடியன், மோசக்காரன் என்று கூறவே கோர்ட்டிலிருந்த சிவ்ராம். 'இல்லை, இல்லை' என்று கூறிக் கொண்டு எழுகிறார். பேசமுடியாமல், நடக்க முடியாமல் மூர்ச்சையாகிறார்.

அவனைச் சுற்றிக் கூட்டம் கூடிவிடுகிறது. நீதிபதி உத்தரவின்மேல் டாக்டருக்கு ஆள் போகிறது. இதற்கிடையே கூண்டிலிருக்கும் லீலா, அந்தக் கிழவனைப் பார்த்து சந்தேகித்து கையில் 'சாரதா' என்று பச்சை குத்தியிருப்பதைக் கண்டு உண்மையறிந்து அவன்தான் சிவராம் என்பதை கூறிவிடுகிறாள். கோபி, ஹரி, லக்ஷ்மி மூவரும் அவர்மீது விழுந்து 'அப்பா அப்பா' எனக் கதறுகிறார்கள். கோபியை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு சாரதாவை அழைத்துவர ஹரி லக்ஷ்மியுடன் ஓடுகிறான். தன் கணவன் உயிருடன் இருப்பதை யறிந்து மகிழ்ச்சி பொங்க கிருஷ்ண விக்ரஹத்திடம் ஓடுகிறாள் சாரதா. அங்கே மஞ்சள் கயிறு கட்டிக் கொண்டு பொட்டிட்டு ஓடிவந்து சிவராமின் மேல் விழுந்து துடிக்கிறாள். உயிருக்கு ஆபத்தில்லை என்று கூறி மருந்து கொடுத்துச் செல்கிறார் டாக்டர். சிவராம் கண்ணை விழிக்கிறான். மனைவியையும் மக்களையும் கண்டு மகிழ்ச்சி யடைகிறான்.

இன்ப வாழ்வின் இடையிலே வந்த துன்பம் துடைக்கப்பட்டு இரட்டிப்பு மடங்கு சந்தோஷத்துடன் ஆனந்தமாக வாழுகிறது சிவராமின் குடும்பம். தன்னைப் பணியும் குழந்தைகளை ஆசீர்வதிக்கும் சிவராம், "'என் வீடு' இன்பத்தின் எல்லையை நோக்கி விட்டது" என்ற பாவனையில் ஆனந்த பாஷ்பம் பொழிந்து தன்னை மறந்து நிற்கிறான். இழந்த கணவனையும் வீட்டையும் மீண்டும் பெற்ற சாரதா ஆனந்த சாகரத்தில் ஆழ்கிறாள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

என் வீடு பாட்டுகள்

1. சிவராம்—குழந்தைகள்

பொன்விளையும் தெய்வீகப் பாரதநா டெந்நாளும்
புகழுடனே வாழ அருள் நாராயணா—சூர்ய நாராயணா
பச்சைப் பயிர்களாய்ப் பாரெங்கும் ஓங்கிவளர
பாலாறாய்ப் பெருகவருள் நாராயணா (புகழுடனே)

அழகாய்க் குழந்தைகள் பாடிக்கொண்டாடியே
மகிழ்வோடு வளரவும் நிறைசெல்வம் பொங்கவும்
நாராயணா (புகழுடனே)

இல்லங்கள் தோறும் மங்கள தீபங்கள் ஒளிவீச
எல்லோரும் ஆனந்தவுள்ளமுடன்—பல்லாண்டு (புகழுடன்)

—பாபநாசம்—சிவன்

2. சிவராம்—சாரதா—குழந்தைகள்

பணிந்தேன் தாயே—பணிந்தேன் தந்தையே
தாள் பணிந்தேன் சத்குருவே—சரணடைந்தேன்
குலதெய்வமே

ஜயக்ருஷ்ண க்ருஷ்ண கோவிந்த ஹரே
ஜயராம க்ருஷ்ண கோபால ஹரே
திருநாம குணாமுத பானமே
பேரின்பமதாம் ஜயக்ருஷ்ண ஹரே

உன் திரு வருளல்லது புவிமீது
என்வாதனே வேறு துணையேது
ஆனந்தமூர்த்தி ஜயக்ருஷ்ண ஹரே
பாலா கோபாலா ஆனந்தா தயாளா
லீலாவதாரா வந்தாள் நந்த பாலா
ஆனந்த மூர்த்தி ஜயக்ருஷ்ண ஹரே

—பாபநாசம் சிவன்

3. லக்ஷ்மி—கோபி—ஹரி

கொஞ்சு மொழிமைந்தர்களே தவளவானில்
தவழ் நிலவின் ஒளியிலோடி ஆடுவீரே
ஜில்லெனவே மெல்ல மெல்ல
வந்துலாவு தென்றல் தன்னை பாடுவீரே

இன்பமான இவ்வுலகம் அன்புள்ளம் கலந்திடிலே
பூங்காவாம் உந்தன் மனம்
உள்ளன்பே தெய்வமனம்
இவ்வுண்மை நீ மறவேல
பூலோகம் தனில்நீயே
ஸ்வர்க்கபோகம் அடைவாயே
புண்ணியத்தில் மானிடப்
பிறப்படைந்த தெண்ணுவையே
நெறி தவறி நீ வீழ்ந்தால்
பாழடையந்ததுன் வாழ்நாள்
கை தவறிய கண்ணாடி
தான் போலாம் பயனில்லை வாடி
கொடிய பாதை நடவாதே
மனவமைதி கிடையாதே
இருள் சூழ்ந்திடும் வாழ்வு
அன்பிலார்க்கு இன்பமில்லை
இவ்வுண்மை நீ மறவேல்

—பாபநா : சிவன்

4. ரேடியோ

என்னென்ன ஆசை காட்டினாயோ
எதெதை கதை யளந்தாயோ
மாந்தளிர் தவழும் மஞ்சத்தின்மேலே
மருவிடுங் காதலி மையலினாலே
தாபம் மீறிடக் கூவுங்குயிலே (என்)

—'சாபி'

5. லீலா டான்ஸ் (ஹிந்தி)

ஹா......ஹா......ஹா......ஹா
மை ஹஸ்தி காதி ஆயீ
மஸ்த் ஜவானி ஆயீ ஆயீ
மஸ்த் ஜவானீ ஆயீ
ஆங்க் ரஸீலி அவுர் நகீலி
நஸர் நகேலி அவுர் ஷர்மீலி
பல்கன் கோட் ஜிபாயி
அர்மானோங்கி தார் மிலாதி
ஜீவன் ஹர்ஷம் காதீ ஹைறம்

தில்கா ஸாரா தர்த் மிடாதீ
தில்கா ஸப்துக் தர்த் மிடாதீ
அப்னு ராக் ஸ்ுனதி ஹைம் (மைஹஸ்தி)

சல்தீ ஸாங்ஸே ப்ரேம் திவானி
ஆஷாவோங்கி மேரீ கஹானி
லாச்மர்ஜ்கீ...ஏக் தவாயீ
மஸ்த் ஹுஸன்கி ஏக் அங்க் டாயி (மைஹஸ்தி)

—(மோஹன்)

6. கோரஸ்

பொங்கும் மங்களமெங்கும் தங்குக
பொங்கலோ பொங்கல்
புது நவரத்ன பரணமுடி மாடையும்
பொங்கலோ பொங்கல்
வீதிகளெங்கும் விதம் விதமாய் இளங்
கன்னியர் கோலமிட
வெண்ணிலவில் இளங்காதலர் அன்பு
குலாவி மகிழ்ந்துலவ
மங்கையர் செங்கை வளைகள் குலுங்கவும்
கும்மியடித்தாட
தங்க நிறந்துடனே நவதானியப்
பைங்கதிர் விளையாட
முக்கனி ரஸமும் கலந்த சர்க்கரைப்
பொங்கலோ பொங்கல்
முழுது நிறைந்த கறந்த பசும்பால்
பொங்கலோ பொங்கல்
மங்கள மஞ்சள் குங்குமமணியும்
மங்கையர் கைகள்
மங்கள தீபாலங்க்ருத மனைகளும்
பொங்கலோ பொங்கல்

—பாபநாசம் சிவன்

7. லவ—குச (நாடகப் பாட்டு)

பூமியிலே ஒரு புண்ய கதை
புனித ராம கதை கேளீரோ
ஜகம் புகழும் ராமகதை கேளீரோ

ஜனகாதி முனிவர் மனதார வாழ்த்த
சிவதனுவை வளைத்து திருமகளை அணைத்த
தாசரதி காதல் கேளீரோ
ஸ்ரீதாசரதி காதல் கேளீரோ
பூமியிலே ஒரு புண்ய கதை
பொன்மானைத் தொடர்ந்து தன்மானைப் பிரிந்து
புவியெங்கும் தேடியலைந்தே
அன்பென்னும் அனலில் மெழுகாக உருகி
"ஹா சீதா!" "ஹா சீதா"
என்றலறி அலறி நின்றழுத நாதனின்
இதயதாபக் கதை கேளீரோ
எமதிறைவன் சோகக்கதை கேளீரோ
தாவுகடல் வென்று தசமுகனைக் கொன்று
ஆவியினை மீட்டு அரசுதனை ஏற்ற
அமரன் வீரக் கதை கேளீரோ
எமதையன் வீரக் கதை கேளீரோ
பூமியிலே ஒரு புண்ய கதை
பாடிடும் வாய் தேன் ஊறிடுமே
பருகிடும் நெஞ்சம் உருகிடுமே
காடுதிரிந்து கடமை புரிந்த
கருணாநிதியின் கதை கேட்டால்
கண்ணீர் ஆறாய்ப் பெருகிடுமே
மனக்கடலும் மலையாய்ப் பொங்கிடுமே
பூமியிலே ஒரு புண்ய கதை

8. டான்ஸ் பாட்டு (ஹிந்தி)

ஹா......ஹா.......
புஷ்பபரி—புஷ்பபரி—புஷ்பபரி—புஷ்பஜரி
புஷ்போங்கி ராணி ஆயீ தோரே தர்பார்
கோலோ மோரே ராஜா நயனன்கே த்வார்
நயனன்கே த்வார் (புஷ்போங்கி)
லோபி பவர்கே நஸர்ஸே பசாகே
புஷ்போங்கி ஜோபன் மை லாயீ சுராகே
லூடோ கிலீகே ஜோபன் கீ பஹார்
ஜோபன் கீ பஹார்—ஹ...ஹ...ஹ...ஹ...
ஜோபன் கீ பஹார் — ..
கோலோ மோரே ஸாஜனா நயனன் கேத்வார்(புஷ்போங்கி

காஹே மேரீ கஸர்—ஜாா தேகோ இதர்
மோரீ பத்லீ கமர்—மோரீ பாலீ உமர் ஹ......ஹ...
நய்னு சுராகே தும்னே மன்வா சுராயா
தில்மே ஸமாகே மோரே தில் தடபாயா

ஹம்ஸே கரோ பியா நய்னு சார்
தடப உடே தோரே ஜியாமே ப்யார்
கோலோ—நயனன்கே த்வார்—மன்மேத்வார் (புஷ்போன்கி)

ஹடோ—ஹடோ, ஹடோ, ஜீ பாலம் நஹீ கரோ சீட் சார்
ஹடோ ஹடோ ஜீ பாலம் ஜியா பேகரார்...
ஜியா பேகரார்—அப் சோடோ தக்ரார் துஹீமேரீ தில்கி
ராணி தும் மேரீ தில் தார்—தில்தார்—தில்தார்!

—காஷ்யப்

9. சிவராம்

எந்த ஊரு சொந்தம்—இங்கு
யார்க்கு யாரு சொந்தம்
எண்ணியே துணிந்தவர்க்கு
எது உலகில் பாசபந்தம் (எந்த)

உலகமெலாம் நமது ஊரு உயிர்களெல்லாம் நமது உறவு
ஒண்டுமிடம் அண்டை வீடு உறங்குமிடம் சொந்த வீடு (எந்த)

ஆடியோடும் படகிலே ஆணும்-பெண்ணும்-ஆசைக்கண்ணும்
ஆயிரம் பல்லாயிரம் பேர் அனுதினமும் ஏறிடுவார் (ஆ)

அன்புடனுற வாடிடுவார் அண்ணன் தம்பி ஆயிடுவார்
அந்தக் கரை வந்துவிட்டால் அவிழ்ந்திடும் மூட்டைபோல்
அவரவர் வழி ஓடிடுவார் (எந்த)

அன்னை என்ற சக்தி அன்பால்—
அருளால்—அணைப்பால்—அகிலமாளும்
அண்டகோடி ஓர் குடும்பம்
அகிலமென்ற மனையிலே
ஒண்டி வாழும் அண்டமேழும்
ஒடுங்கும் சக்தி மடியிலே
ஊரு எது—பேரு எது—
உறவு எது—பிரிவு எது (எந்த)

—'சரபி'

10. சாரதா

நிலையில்லா வாழ்வு இது தானோ
நேற்றிருந்த தெல்லாம் கனவுதானோ
தாங்கிய காதல் பொய்தானோ—எங்கள்
தான தருமமும் பொய்தானோ
எங்கிடும் பாலனை எண்ணியே நான்—கை
ஏந்தி அலைவதும் மெய்தானோ
உண்டான போதும் வந்து உறவாடி
உயிரிலும் பங்கு கொண்டாடி
திண்டாடும் வேளையில் நகையாடும்
சண்டாள உலகம் இது தானோ
இது தானோ எல்லாம் கனவுதானோ

—'சுரபி'

11. பிச்சைக்காரன்

காலமாம் வெள்ளமதிலே ஞாலந்தான் சுழன்றிடுமே
காலமாம் வெள்ளமதிலே ஞாலந்தான் சுழன்றிடுமே
(காலமாம்)

கடலும் மலையாய் மாறிடுமே
கண்ணீர் பன்னீர் ஆயிடுமே
ஆறாத் துயரமேனும் மனம் நீராய் உருகலாமோ
இரவும் பகலும் சாச்வதமோ
உன் ஏக்கமிது தான் நிரந்தரமோ
ஜோதி உதிக்குது பாராய்
கீர்த்தி வளர்த்திட வாராய்

—'சுரபி'

12

கோரஸ்: பூரண சந்திரன் சிரிக்குது பார்
பூமியில் இருள் பறக்குது பார்
மரமும் செடியும் ஆடுது பார்
'வா வா' என்றே அழைக்குது பார்

பெண்; வாராய் எந்தன் சந்திரன் நீ வாராய்
கானகந்தனில் அலைந்தாயோ
கண் சிமிட்டிடும் தாரைமேல்
காதலாகியே நீ திரிந்தையே

கோரஸ்: அம்புலி மாமா வாராயோ
அன்பாய் எங்களை பாராயோ

ஆண்: மாசில் மூழ்கி மறைந்தேனே
ஆசை பாசமும் மறந்தேனே

பெண்: பேதை என்னை நீ மறந்தாலும்
பிள்ளை குட்டியை மறப்பாயோ—மாமா

கோரஸ்: எங்கள் ஊரில் நில்லாயோ
இன்பக் கதைகள் சொல்லாயோ

பெண்: போன நாள்களை மறப்போமே
புதிய வாழ்வை நினைப்போமே
வீடு விளங்கிட விளக்கேற்றி
மேன்மையாகவே வாழ்வோமே

கோரஸ்: ஆணும் பெண்ணும் களிப்போமே
அமுத நிலவிலே குளிப்போமே

—'சுரபி'

13. கோரஸ்

கண்மணியே கண்மணியே
கலி தீர்த்த கருமணியே
எங்கள் கலி தீர்த்த கருமணியே
விண்மணியே விண்மணியே
விலைமதியாக் குலமணியே
வாடாத வான்மலரே
குறையாத நிறைமதியே
தெவிட்டாத தெள்ளமுதே
ஓங்கும் வேங்கட மாமலைபோல்
ஒளியில் விளையும் வளர்பிறையின் கலைகள்போல்
தாங்கும் தேவி தன்னருளால்
குணந்தழைப்பாய் இன்பமணந் தழைப்பாய்
எங்கள் குலவிளக்காய்
அன்பினில் விளையும் ஆரமுதாய்
அலைகடல் வளரும் அருமருந்தாய்
ஆண்டு பல்லாண்டு வாழ்ந்திடுவாய்

—பாபநாசம் சிவன்

வணக்கம்!

நடிக நடிகைகள்

வி. நாகையா	....	டி. ஆர். ராஜகுமாரி
டி. எஸ். பாலையா	...	கிரிஜா
ராம சர்மா	...	வித்யாவதி
கோபால கிருஷ்ணன்	....	சாயாதேவி
கிருஷ்ணஸ்வாமி	....	கே. துரைசாமி
மாஸ்டர் சுதாகர்	...	டி. கே. கல்யாணம்
மாஸ்டர் கிருஷ்ணு	....	லக்ஷ்மி
ஜகந்நாதன்	...	நடராஜன்
வீ. டி. கல்யாணம	...	டி. ஏ. ராமராவ்
சிட்டி பாபு	...	ராமஸ்வாமி

சம்பத்குமாரி, ஷண்முகம், தேசிகன், குஞ்சிதபாதம், எம். வி. சர்மா, வி. எல். சாஸ்திரி, கனகையா செட்டி, நாராயணய்யா, இனகண்டி ராமமூர்த்தி, ஜாப்பர், மல்லிகார் ஜனராவ், ராஜேஸ்வரி பிரபாவதி, லீலா ராணி, சரசா, கே. லக்ஷ்மி. அன்னபூர்ணு, சாந்தசுந்தரி, சாவித்திரி, கோகிலா, கிருஷ்ணவேணி முதலியோர்.

பாட்டுகள்—பாபநாசம் சிவன்—'சுரபி'

பின்னணி சங்கீதம்:

எம். எல். வசந்தகுமாரி, ஆர். பாலசரஸ்வதி,
பி. ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி), கானசரஸ்வதி, லலிதா,
ரத்னம், சுந்தரம்மா, சத்யவதி, மோதி, வி. ஜே. வர்மா
மாதவபெத்தி சத்யம்.

திரைக் கதை, டைரக்ஷன்:—வி. நாகையா

வசனம்:—'சாண்டில்யன்'

ஸ்டுடியோ:—வாஹினி, ரேவதி

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை—1

கலைமன்ற வெளியீடுகள்!

"ஊடுருவி" தீட்டியவை

சீனத்துச் சிங்கம்		1	0	0
தொழிலாளர்	(மாஜினி)	1	0	0
கலிங்கப்போர்	(சரித்திர வரலாறு)	1	0	0
அரசாங்கம்	(லெனின்)	1	0	0
கடவுள்	(இங்கர்சால்)	1	0	0
கோயில்கள்	,,	1	0	0
உண்மை	,,	1	0	0
மக்கள் உரிமை	,,	1	0	0
லைலா – மஜ்னு		1	0	0
வீரமங்கை ஜோன்		1	0	0
ரோமியோ ஜூலியத்	(ஷேக்ஸ்பியர்)	1	0	0
மாஜி கடவுள்கள்		1	0	0
உலகைத் திருத்திய உத்தமர்கள்	(1-ம் பாகம்)	1	0	0
ஒளி விளக்குகள்	(2-ம் பாகம்)	1	0	0
நாநா	(எமிலி ஜோலா)	1	0	0
ரஸ்புடீன்		0	8	0
அறிஞர் அண்ணாதுரை	(தொகுப்பு நூல்)	1	0	0
தளபதி	(விருதை-ந. இராமசாமி)	1	0	0
வழுக்கி விழுந்தவள்	,,	1	0	0
மலர்புரி ராணி	,,	1	0	0
கருமுகில்	,,	1	0	0
விதி	(வால்டேர்)	1	0	0
ஜூலி	(ரூஸ்ஸோ)	1	0	0
எகிப்து நாட்டு எழிலரசி	(க. நிலாவழகன்)	1	0	0
புராண மதங்கள்	(C. N. A.)	1	0	0
தேன் துளிகள்	,,	1	0	0
தம்பதிகள் சுகமாய் வாழ்வது எப்படி?		3	12	0

கேட்லாக் வேண்டுவோர் விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு:-
ஸ்ரீ மகள் கம்பெனி
P. O. No. 275, சென்னை-1

விற்பனை நிலையம்:-
M. S. ராமுலு கம்பெனி
286, சைனா பஜார் சென்னை-1

TAMIL NADU ARCHIVES ... LIBRARY
10384

ஒவ்வொரு ஆணும் பெண்ணும்
தெரிந்திருக்க வேண்டிய பல
ரகசியங்கள் ... அடங்கியது

யாவரும்
படிக்க
வேண்டிய
புத்தகம்

விலை
ரூபாய்
3-12-0

ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1.